REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 பெப்ரவரி 19 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 92 இல. 43
Monday 19, February, 2024
16 பக்கங்கள்
50/-

## 300 ஏக்கர் விவசாயக் காணிகள் இராணுவத்தினரால் விடுவிப்பு



யாழ். தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வலிகாமம் வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டினுள் இதுவரை விடுவிக்கப்படாமல் இருக்கும் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஒரு மாத காலத்துக்குள் சாதகமான பதிலை வழங்குமாறு இராணுவத்தினருக்கு 06

# உயர்மட்ட சுற்றுலா பயணிகளை அழைத்து வரும் திட்டம் ஆரம்பம்

நாட்டின் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சி காரணமாக சுற்றுலா வலயங்களை அண்மித்த பகுதிகளில், வசதிகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தியிருக்கும் அதேநேரம், அது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (17) தங்கல்ல முதல் காலி வரையுள்ள பல சுற்றுலாத் தளங்களுக்கு நேரடியாக விஜயம் செய்திருந்தார்.

இதன்போது சுற்றுலா ஹோட்டல்களுக்குச் சென்ற ஜனாதிபதி, ஹோட்டல் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இதன்போது சுற்றுலாத் துறையினர் சுட்டிக்காட்டிய பிரச்சினைகளுக்கு 06



## காமினி ஜயவிக்கிரம பெரேராவின் இறுதிக்கிரியைகள் நாளை பன்னலயில்



முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தனது 83 ஆவது வயதில் நேற்று முன்தினம் (17) காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20) செவ்வாய்க்கிழமை பன்னலயில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குளியாப்பிட்டி, பன்னல பொது விளையாட்டு மைதானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளன. 06

### ஐ.நா. உணவு, விவசாய அமைப்பின்

## 37ஆவது மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பம்

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய மாநாடு இன்று19ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது. இம்மாநாடு 22ஆம் திகதிவரை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. மாநாட்டின் ஆரம்ப அமர்வு நாளை 20ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறுவதற்கு 06

## டி.ஆர்.விஜயவர்தனவின் 138ஆவது ஜனன தினம்

### 21, 22ஆம் திகதிகளில் விசேட நிகழ்வுகள்



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் அமரர் டி.ஆர்.விஜயவர்தனவின் 138ஆவது ஜனன தினத்தையொட்டி லேக்ஹவுஸ் நிறுவனத்தில் எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் விசேட சமய 06

### மலையகத்தில் இந்திய அரசின் நிதி உதவியில்

# பாரத்-லங்கா 10,000 வீட்டுத் திட்டம் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

### ஜனாதிபதி செயலகத்தில் இன்று பிரதான நிகழ்வு; அமைச்சர் ஜீவன், இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா பங்கேற்பு


### மலையகத்தின் 10 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில், 45 தோட்டங்களில் நிகழ்நிலையூடாக நிர்மாணப் பணிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு ஏற்பாடு

இந்திய அரசின் நிதி உதவியில் மலையகத்துக்கான பாரத் – லங்கா 10,000 வீட்டுத் திட்டம் இன்று 19 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக 1,300 வீடுகளுக்கு ஒரே தடவையில் நிர்மாணப் பணிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்திய அரசின் நிதி உதவியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுடனும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஒருங்கிணைப்பின் கீழும் இத்திட்டம் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இன்று ஆரம்பிக்கப்படவுள்ள முதற்கட்ட பணிகளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை, கேகாலை, குருணாகல், இரத்தினபுரி, காலி, 06






நாட்டின் முதல் முஸ்லிம் மகளிர் கல்லூரியான பேருவளை மருதானை அல் பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி, ஞாபகார்த்த முத்திரையொன்று வெளியிடப்பட்டது. பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, கௌரவ அதிதியான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பியிடம் முத்திரையை கையளிக்கிறார்.

## சட்டங்களின் பிரச்சினைகளை ஆராய அமெரிக்க பிரதிநிதிகள் வருகை

நிகழ்நிலை காப்புச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக, அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு தொடர்புகள் குழுவின் சிரேஷ்ட தொழில்சார் பணிக்குழாமின் பிரதிநிதிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் 06



## கட்சி செயலர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு முக்கிய அழைப்பு

### இம்மாதம் 27 அல்லது மார்ச் 06 இல் சந்திப்பு



நடைபெறவுள்ள தேர்தல்கள் குறித்து கலந்துரையாடும் நோக்கில், அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளதாக அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 06

### 13 ஆவது திருத்தம் வழங்கிய

## பொலிஸ் அதிகாரத்தை பறிக்கும் முயற்சிகளை ஈபிடிபி எதிர்க்கும்



மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தை இல்லாமல் செய்வதற்கு அனுமதிக்க முடியாதென, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். பொலிஸ் அதிகாரத்தை மீளப்பெறுவதற்காக உதய கம்பன்பிலவினால் பாராளுமன்றத்தில் 06




03

## இந்தியா தொடர்பான JVP யின் கொள்கைகளில் திடீர் மாற்றம்

### வரவேற்கத்தக்கதென்கிறார் அமைச்சர் மனுஷ

## சகல ச.தொ.சக்களிலும் இந்திய முட்டைகள்



நாடளாவிய ரீதியிலுள்ள சகல லங்கா சதொச நிறுவனங்களிலும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 70 இலட்சம் முட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள 06

### கட்சியின் செயற்றிட்டம் விரைவில்

## அனைவரும் பயன் பெறக்கூடிய மாற்றங்களை கொண்டு வருவோம்

‘மவ்பிம ஜனதா கட்சி’யின் எதிர்கால செயற்றிட்டங்களை விரைவில் வெளியிடவுள்ளதாக கட்சியின் தலைவர் திலீத் ஜயவீர அறிவித்துள்ளார். பல் கலைக்கழக வாழ்க்கையின் போதும் அதன் 06



## அத்துமீறும் தமிழக மீனவர்களால் வடக்கு மீனவர்களுக்கே பாதிப்பு

### கச்சதீவை மீளக் கோருவது நியாயமல்ல

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதால், இலங்கை மீனவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே இலங்கை மீனவர்களின் பாதிப்புகளை உணர்ந்து இந்திய மீனவர்கள் செயற்படவேண்டுமென 06



## விமானப்படையின் 73 வருட விழா வடக்கில் பல வேலைத்திட்டங்கள்


### ரூ, 25 மில்லியனில் 73,000 புத்தகங்கள் அன்பளிப்பு

**ஸாதிக் ஷிஹான்**

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, வடக்கில் பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 06



## சமாதான நீதவான் நியமனங்கள் கல்வித்தகைமையில் திருத்தங்கள்



சமாதான நீதவான் நியமனத்தை பெறுவதற்கான கல்வித் தகைமை தொடர்பில் மீண்டும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. சமாதான நீதவான்களுக்கான கல்வித் தகைமை தொடர்பில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவினால் கடந்த நவம்பர் (27) வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்தது.

இதன்படி, சமாதான நீதவானாக நியமனம் பெறுவதற்கான நிபந்தனையாக கல்விப் 06

## தேசிய அரசு அமையுமானால் மு.கா ஆதரவு வழங்கத் தயார்


### பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் முடியும்



ஒரு தேசிய அரசின் தோரணையில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்பன ஒன்றிணைந்து, நாட்டை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாயின் அதற்கு எங்களது ஆதரவு கிடைக்குமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்துள்ளார். 06

## CCTV கெமராக்களில் 793 போக்குவரத்து மீறல்கள் பதிவு

### 300 பொலிஸ் நிலையங்களூடாக நடவடிக்கை



போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடுவோரை கண்காணிக்க கொழும்பு நகரைச் சூழவுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்ட CCTV கண்காணிப்பு கெமராக்களில், 793 நடைமுறை மீறல்கள் பதிவாகியுள்ளன. 06

## தலைவரின் கட்டுப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி இல்லை

### 02 மர்ம நபர்களின் கீழேயே இருக்கிறது

ஐக்கிய மக்கள் சக்தி இரண்டு மர்ம நபர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குற்றம்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச கட்சியின் ஆதரவாளர்கள் கட்சியிலிருந்து விலகிச்செல்லும் நிலையை உருவாக்குகின்றார். கட்சியை நாளாந்தம் 06



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 19 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්


**தொழுகை நேரம்**

சுபஹ் - 05.11
ளுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் மாசி 07
ராகுகாலம் : காலை : 8.02 - 9.32வரை
சுபநேரம் : பகல் : 12.32 - 2.02வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# ஈரான் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகை



ஈரான் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹொஷைன் அமீர் அப்துல்லா ஹியன் ( Dr. Hossein Amir Abdollahian) இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் அழைப்பின் பேரில், அவர் இன்று (19) இலங்கைக்க்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்று இலங்கை வரும் அவர், எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உட்பட பலரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

# புனித ஜோசப் வாஸ் சிலுவைப்பாதை



கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றம் வருடாந்தம் நடத்தும் தவக்கால திறந்த வெளி பெரிய சிலுவைப் பாதை, நேற்று பிற்பகல் கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு பி. அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. சிலுவைப் பவனி கொச்சிக்கடைபுனித அந்தோனியார் ஆலய பகுதி ஊடாக வந்த போது பிடிக்கப்பட்ட படம்.

# தவக்கால சிந்தனை



## அன்பு வாழ்வுக்கான அடித்தளம்

வசந்தம், கோடை, இலையுதிர், குளிர்காலமென பருவம் மாறுவதனை வாழ்நாள் முழுவதும் நாம் காண்கிறோம். அவ்வாறே திருவருகை,கிறிஸ்து பிறப்பு, தவக்காலம், பாஸ்கா என்று புனித காலங்கள் திரும்புவதனையும் காண்கிறோம்.

விபூதிப் புதனன்று நெற்றியில் சாம்பலினால் சிலுவை அடையாளமிட்டு நாம் தவக்காலத்தினைஆரம்பித்தோம். மீளவும் புனிதர்களாக இருக்க வேண்டிய அழைப்பினைஅந்நாளில் கேட்டோம்.

நம்மில் ஏற்படுகின்ற மனமாற்றமானது நாம் தீமைக்குஎதிரான போராட்டத்தில் ஈடுபடவும், தாழ்ச்சியுடனும் நேர்மையுடனும் பயணிக்கவும் துணைசெய்யும்.

அத்துடன் வழிபாட்டுக் கொண்டாட்டங்களில் செயற்துடிப்புடன் பங்கேற்கவும், கடவுளுடனும், நமது சகோதர சகோதரிகளுடனான உறவினை ஆழப்படுத்தவும் உதவிடும்.

இறைவேண்டல், உண்ணா நோன்பு, தர்மச் செயல்கள் இக்காலத்தின் தூண்களாகும். இன்றைய வழிபாடானது விவிலியத்தின் மிகவும் ஈர்க்கத்தக்க ஒருபகுதியினை நமக்குத் தருகிறது. அது யாதெனில், ஒருகிறிஸ்தவரின் வாழ்வின் மிகமுக்கியமான விடயமாகிய அன்பு வாழ்வு வாழ்வதனைஅது நமக்கு நினைவூட்டுகிறது. நாம் ஏற்கனவே அன்புசெய்வோரோடு மட்டுமல்லாது தேவையில் உள்ளவரோடும், யாரும் கவனியாதாரோடும் அதனைச் செயற்படுத்த அழைக்கப்பட்டுள்ளோம்.

அன்புக்காக ஏங்குபவர்கள் தேவையில் உள்ளவர்கள் என்பதனால், அவர்கள் நமது அன்பினைப் பெறுவார்கள். அவர்களிடம் உண்பதற்கு எதுவுமில்லை, உடுத்துவதற்கும் எதுவுமில்லை. ஏழைகள்,நோயாளிகள்,வயோதிபர்கள்,ஒதுக்கப்பட்டவர்கள்,அந்நியர்கள் ஆகிய இவர்களை இக்காலத்தில் சந்திப்பதன் வாயிலாக அவர்களுக்கான எமது பணியினைஆரம்பிக்கலாம்.

தேவையில் இருப்போர் மீதான உறுதியான நிலைப்பாடு இயேசுவின் வார்த்தையாகிய“என் தந்தையிடமிருந்து ஆசிபெற்றவர்களே ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள்” என்பதனை நமக்குள் தெளிவாக எதிரொலிக்கச் செய்யும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# பொருளாதார நெருக்கடிகளின் உண்மையான தகவல்களை ஊடகவியலாளர்கள் வெளியிட வேண்டும்

## ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வில் அமைச்சர் பந்துல

ஊடகவியலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட செயலமர்வு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.பிரதேச ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வு “EMPOWER” எனும் தொனிப்பொருளின் கீழ்,இரு தினங்கள் நடத்தப்பட்டன . வெறுப்பூட்டும் பேச்சு, தவறான நோக்கில் பரப்பப்படும் உண்மையான தகவல்கள் மற்றும் குரோத தகவல் அறிக்கை, தனிப்பட்ட தகவல் அறிக்கைகள், துஷ்ட நோக்கில் பரப்பப்படும் உண்மையான தகவல்கள், குரோத அறிக்கைகள், குற்ற அறிக்கையிடல் உள்ளிட்ட பல பிரிவுகளின் கீழ் இச்செயலமர்வு நடத்தப்பட்டது. (UNDP) வழிகாட்டுதலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தப் பயிற்சிப்பட்டறை, 2023 ஆகஸ்ட் 02 மற்றும் 03 ஆகிய திகதிகளில் நடைபெற்ற இரண்டு நாள் பயிற்சி பட்டறையுடன் தொடங்கியது.

நாட்டில் உருவாகும் தொழில் வல்லுநர்கள் பலருக்கு நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி குறித்து உண்மையான அறிவு இல்லாதுள்ளது. இவ்வாறுள்ள

சமூகத்துக்கு மத்தியில்,ஊடகவியலாளர்களுக்கு பாரிய பொறுப்புள்ளது. தற்போதுள்ள நிலைமைகள் தொடர்பில், உண்மைத் தகவல்களைப் பெற்று நியாயமாகவும், விமர்சன ரீதியாகவும், ஆய்வு ரீதியாகவும், விவேகமாகவும் சமூகத்திற்கு முன்வைப்பது ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும். குரோதமற்ற, வன்முறை அல்லாத மனிதாபிமானத்தை மதிக்கும் சமூகத்திற்காக இது முக்கியமானதென நான் நம்புகிறேன். இதற்காக நிதி உதவியை வழங்கிய ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தினருக்கும், பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில், எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுக்குத் தேவையான எரிபொருள், எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய எங்களிடம் வெளிநாட்டு கையிருப்பு இருக்கவில்லை. இறுதிக்கட்டத்தில் இருந்த கட்டுமானப் பணிகள் கூட பாதியில் நிறுத்தப்பட்டன. எரிவாயு பெற மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சிலர் அங்கு உயிரையும் இழந்தனர். கலவரம் மூண்டது. நீண்ட நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இந்த நிலைமைகள் குறித்து ஊடகங்கள் வெவ்வேறு வழிகளில் செய்திகளை வெளியிட்டன. நாடு பொருளாதார ரீதியாக எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடிக்கு பொருளாதார தீர்வே உள்ளது.

அரசியல் தீர்வு இல்லை. இந்தச் சூழலைப் பற்றிய சரியான புரிதலை வழங்குவதில் ஊடகங்கள் நியாயமான, உண்மையான மற்றும் முக்கியமான பங்காற்றியதாக நான் நம்பவில்லை.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச அமைப்புக்கள் செய்துள்ள உடன்படிக்கைகளின்படி 2027ஆம் ஆண்டளவில் ஏற்படக்கூடிய வெளிநாட்டு வள இடைவெளி 3911 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதைத் தீர்ப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் கீழ்,உதவிகளைப் பெறத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# அரச வங்கிகளை தேசிய வளங்களாக பாதுகாக்க வேண்டியது அவசியம்

## அரசின் நிலைப்பாடும் இதுவே என்கிறார் பிரதமர்



அரச வங்கிகள் தேசிய வளங்களாக பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருக்கிறது. அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆனால் சில மாற்றங்களைச் செய்வது குறித்து கலந்துரையாட வேண்டும். இல்லையெனில், நாம் ஒருதலைப்பட்சமாக முடிவுகளை எடுக்க வேண்டியிருக்குமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் (16) அலரி மாளிகையில் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலே, பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் நிறுவன பிரச்சினைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தொழிற்சங்கங்களின் மறுசீரமைப்பு, மாற்று முன்மொழிவுகள், நிறுவனங்களைப் பாதுகாத்தல் மற்றும் கொண்டுநடத்தல் தொடர்பான பல விடயங்களை இதன்போது அவர்கள் முன்வைத்தனர்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர் “இந்த அரச வங்கிகள் தேசிய வளமாக பாதுகாக்கப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டிலே நாங்கள் உள்ளோம். இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆனால் சில மாற்றங்களைச் செய்வது குறித்து கலந்துரையாட வேண்டும்.இல்லையென்றால், நாம் ஒருதலைப்பட்சமாக முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும்.

தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து நாம் ஓரளவு மீண்டிருப்பதால், முக்கியமான வங்கிகளை எப்படியேனும் பாதுகாக்க வேண்டும். அதை எப்படி செய்வது என்பது இன்னும் விரிவாக கலந்துரையாடப்பட வேண்டும். பல பாரிய வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்தான், பாரதூரமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. அரசியல்வாதிகளுக்கு கடன் கொடுத்ததாலேயே, வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது, அதை தனியார் நிறுவனத்துக்கு விற்பதுதான் ஒரே வழி என்பவையெல்லாம் புனையப்பட்ட கதைகள். இதுபோன்ற கதைகளில் நாம் ஏமாறாமல், இந்த மூன்று வங்கிகளிலும் சிறப்பான முறையில் தலையிட வேண்டும். பெருந்தோட்டக் கிராமங்களை அமைப்பதில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பெருந்தோட்டக் கிராமங்களை அமைப்பதற்கான குறிப்பிட்ட பகுதிகளை அடையாளம் காணும் பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை.

3,500 அடிக்கு மேல் உள்ள பகுதிகளில் எந்த விதத்திலும் புதிய வீடுகள் கட்டப்படமாட்டாது. இது அரசின் முடிவு. அந்தப் பகுதிகள் படிப்படியாக வனப் பாதுகாப்பிற்கு விடுவிக்கப்படும். தற்போது நாம் இணங்கியுள்ள சர்வதேச காலநிலை மாற்ற உடன்படிக்கையின் படி, மூவாயிரம் அடிக்கு மேல் உள்ள தோட்டங்களை குடியிருப்பாளர்கள் இன்றியே வைத்திருக்க முடியும்.

இதுபோன்ற உயரமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு என்ன செய்வது என்று இந்நாட்களில் கலந்துரையாடப்படுகிறது. பெருந்தோட்டங்களில் 1,43,000 வீட்டு உரிமையாளர்களே உள்ளனர். ஏனையவர்கள் தோட்டங்களில் வசிக்கவில்லை."

# கச்சதீவு அந்தோனியார் திருவிழா உத்தேச செலவினம் 90 இலட்சம்

## 10 இலட்சம் ரூபாவே கிடைத்துள்ளதாக யாழ். மாவட்ட செயலர் தெரிவிப்பு

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கு 90 இலட்சம் ரூபா உத்தேச செலவினமாக மதிப்பிடப்பட்டுள்ள போதும், 10 இலட்சம் ரூபாவே திணைக்களங்களூடாக பெறப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலாளர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

இம்முறை பயணிகளிடம் ஒருவழி படகுப் பயண கட்டணமாக 1,500 ரூபா பணம் அறவிடப்படவுள்ளதாகவும் யாத்திரிகர்கள் இம்முறை தமக்குத் தேவையான உணவை, தாமே கொண்டுவர வேண்டுமென்பதாகவும் பல்வேறு அறிவுறுத்தல்கள் யாழ். மாவட்ட செயலகத்தால் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இந்திய துணைத் தூதரகம் நிதி பங்களிப்புக்களை வழங்கி வந்த போதும், இதுபற்றி இம்முறை தூதரகம் இதுவரையில் எந்தவொரு தகவலையும் எமக்கு அளிக்கவில்லையெனவும் அவர் கூறினார்.

கச்சதீவு திருவிழா எதிர்வரும் (24) நடைபெறவுள்ளது. இலங்கையிலிருந்து 04 ஆயிரம் பக்தர்களும் இந்தியாவிலிருந்து 04 ஆயிரம் பக்தர்களும் இதில், கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதைக் கண்டித்தும், அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை சிறைகளிலுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க கோரியும், இராமேஸ்வரம் மீனவர்கள் கச்சதீவு திருவிழாவை புறக்கணிக்கவுள்ளதாக தீர்மானம் எடுத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# போலி ஆவணங்களில் இலங்கை தமிழர் கடவுச்சீட்டு பெறுவதற்கு உதவி

## தமிழகத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

தஞ்சாவூா் மாவட்டம், சேதுபாவாசத்திரம் பகுதியில், இலங்கை தமிழா்களுக்கு போலி ஆவணங்கள் மூலம், கடவுச்சீட்டுப் பெற உதவிய வழக்கில், சேதுபாவாசத்திரம் தலைமை பொலிஸ் அதிகாரியான சேஷா கைது செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் பொலிஸ் சரக பகுதியில் போலி ஆவணங்கள் மூலம் கடவுச்சீட்டு விநியோகம் செய்யப்படுவதாக கிடைத்த தகவலின் பேரில், க்யூ பிரிவு பொலிஸ் துணை ஆணையாளர் சிவசங்கரன் தலைமையில் பொலிஸ் ஆய்வாளா் பிரபாகரன் உள்ளிட்ட 10 போ் கொண்ட குழுவினர், தீவிர விசாரணையில் ஈடுபட்டு வந்தனர் . விசாரணையில், இலங்கை தமிழா்களுக்கு போலியாக ஆவணங்கள் தயாரித்து, அதை இணையவழியில் விண்ணப்பித்தும், உரிய பொலிஸ் விசாரணை ஏதும் நடத்தாமல், அதற்கு ஒப்புதல் வழங்கியும், கடவுச்சீட்டு அலுவலகத்திலுள்ள சிலரின் துணையோடு கடவுச்சீட்டு வழங்கியது தெரியவந்தது. இது தொடா்பாக விசாரணையில் சேதுபாவாசத்திரம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் முறையாக விசாரணை நடத்தாமல், போலி ஆவணங்களுக்கு கடவுச்சீட்டு வழங்க ஒப்புதல் அளித்தது தெரியவந்தது.

இதையடுத்து, சேதுபாவாசத்திரம் அருகேயுள்ள ஆண்டிக்காடு கிராம முன்னாள் தபால் ஊழியர் ஒருவர் உட்பட 06 பேரை கடந்த 2023ஆம் ஆண்டு டிச.13ஆம் தேதி க்யூ பிரிவு பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# இந்தியா தொடர்பான JVP யின் கொள்கைகளில் திடீர் மாற்றம்

## வரவேற்கத்தக்கதென்கிறார் அமைச்சர் மனுஷ

(லோரன்ஸ் செல்வநாயகம்)



மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் குழுவொன்று இந்தியாவிற்கு செல்லாமல் இருந்திருந்தால், யு.பி.ஐ என்ற பணம் செலுத்தும் முறைமைக்கு எதிராக விஷமப் பிரசாரங்களை பரப்பியிருப்பார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுவரை,மக்கள் விடுதலை முன்னணியினரிடமிருந்து வந்த இந்திய விரோத கொள்கை, தற்போது மாறமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை வெற்றிகொள்வோம் திட்டத்தின் நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

06

# ‘க்’ விடுப்பட்டதால் கட்சிப் பெயர் திருத்தம்

## நடிகர் விஜய் அறிவிப்பு

'தமிழக வெற்றி கழகம்' என்ற தனது கட்சியின் பெயரில் நடிகர் விஜய் திருத்தம் செய்துள்ளார். கடந்த 02ஆம் திகதி நடிகர் விஜய் அரசியல் கட்சியை தொடங்குவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்து தனது கட்சி பெயரையும் வெளியிட்டார்.

அவர் அறிவித்த 'தமிழக வெற்றி கழகம்' என்ற கட்சி பெயரில், 'க்' விடுபட்டுள்ளதாக தமிழ் ஆர்வலர்கள் பலரும் சுட்டிக் காட்டினர். கட்சிப் பெயரிலேயே தவறு இருப்பதாக பிற கட்சியினரும் சமூக வலைதளங்களில் விமர்சித்து வந்தனர். எனவே கட்சியின் பெயரில் ‘க்’ என்ற எழுத்தை இணைத்து 'தமிழக வெற்றிக் கழகம்' என திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து தனது கட்சியின் பெயரில் 'க்' சேர்த்து 'தமிழக வெற்றிக் கழகம்' என்று மாற்ற நடிகர் விஜய் ஒப்புதல் அளித்தார். தொடர்ந்து அக்கட்சியின் உத்தியோகபூர்வ சமூக வலைதள பக்கங்களில் 'க்' சேர்த்து 'தமிழக வெற்றிக் கழகம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.





# ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் 37ஆவது முறையாகவும் நடத்தப்படுகின்ற ஆசிய பசிபிக் பிராந்திய உச்சிமாநாடு

**2024 பெப்ரவரி 19, 20, 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் கொழும்பு - ஹில்டன் ஹோட்டலில் நடைபெறும்.**

**2024 பெப்ரவரி 20 ஆம் திகதி**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்
அதிமேதகு ஜனாதிபதி

**ரணில் விக்கிரமசிங்க** அவர்களின்
தலைமையில் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கௌரவ

**மஹிந்த அமரவீர**

மற்றும்

ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம்

**சூ டொங்யு**

ஆகியோர் உட்பட 44 நாடுகளின் சுமார் 300 பிரதிநிதிகளின் பங்கேற்புடன் ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது.

இது கொவிட் பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் இலங்கையில் ஒரே தடவையில் அதிகமான இராஜதந்திரிகள் பங்கேற்கும் உச்சி மாநாடாகும்.

27 நாடுகளின் விவசாய அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்பதோடு, பல நாடுகளும் இலங்கை அரசுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளன.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

FAO FIAT PANIS

ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பு

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 06ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 08



**குறள் தரும் சிந்தனை**

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்

இப்பேருலகில் மழை பொய்த்து விடுமானால் அது, பிறர் பொருட்டுச் செய்யும் தானத்திற்கும், தன்பொருட்டு மேற்கொள்ளும் நோன்புக்கும் தடங்கலாகும்.

# நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிக்கும் உல்லாசப் பயணத்துறை

இந்து சமுத்திரத்தில் நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட அழகிய தீவுகளில் இலங்கையும் ஒன்றாகும். சிறந்த சீதோஷண நிலையைக் கொண்டுள்ள இந்நாட்டில் இயற்கை வளங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. எழிமிகு கடற்கரைகள், நீரூற்றுகள், நீர்வீழ்ச்சிகள், ஆறுகள் மாத்திரமல்லாமல் இலங்கைக்கே உரித்தான பறவைகள், வனவிலங்குகள் உள்ளிட்ட பல்வேறு உயிரினங்களும் தாவரங்களும் இங்கு காணப்படுகின்றன. அத்தோடு வட அரைக்கோள நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பறவை இனங்களும் வருடாவருடம் குறிப்பிட்ட காலப்பகுதியில் இங்கு குடிபெயர்ந்து வந்து செல்கின்றன.

இவ்வாறு இந்நாடு இயற்கையாக பெற்றுக்கொண்டுள்ள வளங்களை உரிய முறையில் பயன்படுத்தும் போது இந்நாட்டின் உல்லாசப் பயணத்துறை பாரிய முன்னேற்றமடையும். அது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பாரிய பங்களிப்பை நல்கும். பொருளாதார நிபுணர்களின் கருத்தும் அதுதான்.

கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக உலகளாவிய ரீதியில் மாத்திரமல்லாமல் இலங்கையிலும் சுற்றுலாத் துறை பாரிய வீழ்ச்சி அடைந்தது. அதனால் 2020 இல் 5 இலட்சத்து 7ஆயிரத்து 704 உல்லாசப் பயணிகள்தான் இலங்கைக்கு வருகை தந்தனர். அது 2021 இல் ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 495 பேராக மேலும் வீழ்ச்சியடைந்தது. இந்நாடு 2022 இன் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அதனால் எரிபொருள், எரிவாயு பற்றாக்குறை, மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கும் முழு நாடும் உள்ளானது. அதனால் உல்லாசப் பயணிகளின் வருகை கொவிட் 19 தொற்றின் வீழ்ச்சியோடு சேர்த்து இப்பொருளாதார நெருக்கடியினாலும் மேலும் குறைவடைந்தது.

இவ்வாறான சூழலில், 2022 இன் ஜுலை பிற்பகுதியில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் முன்னெடுக்கலானார். அவற்றில் உல்லாசப் பயணத்துறை மேம்பாட்டு வேலைத்திட்டங்களும் அடங்கும்.

இதன் விளைவாக 2022 ஒக்டோபர் முதல் உல்லாசப் பயணிகளின் வருகை கட்டம் கட்டமாக அதிகரிக்கத் தொடங்கியது. அந்த வகையில் 2022 நிறைவடையும் போது 7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 உல்லாசப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருந்தனர். அது 2023 இல் 14 இலட்சத்து 87 ஆயிரத்து 303 உல்லாசப் பயணிகள் வரை அதிகரித்தது. இந்த அதிகரிப்பானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இரு மடங்கு அதிகரிப்பாகும். ஆனாலும் கடந்த ஆண்டின் மே மாதம் தவிர்ந்த ஒவ்வொரு மாதமும் இந்நாட்டுக்கு வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தையும் கடந்து வந்த நிலையில் டிசம்பர் மாதத்தில் அது இரண்டு இலட்சத்தையும் தாண்டியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாறான நிலையில், 2024 ஜனவரி மாதம் மாத்திரம் 2 இலட்சத்து 8 ஆயிரத்து 253 உல்லாசப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இம்மாதத்தின் முதல் 15 நாட்களிலும் கூட ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 328 பேர் வந்துள்ளனர்.

இந்நிலையில் 2024 இல் 25 இலட்சத்தை விடவும் அதிக எண்ணிக்கையிலான உல்லாசப் பயணிகளின் வருகை எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 2017 இல் இந்நாட்டுக்கு 25 இலட்சம் உல்லாசப் பயணிகளின் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாட்டின் உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களின் பிரதிபலனாக சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தென்பகுதியின் காலி, தங்காலை சுற்றுலாப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று சுற்றுலா பயணிகளுடனும் ஹோட்டல் துறையினருடனும் அலவளாவினார். அவர்களது குறை நிறைகளையும் தேவைகளையும் கேட்றிந்தார். அத்தோடு சுற்றுலாக் கைத்தொழில் துறையினர் முன்வைத்த பல பிரச்சினைகளுக்கும் தேவைகளுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் தொடர்பு கொண்டு தீர்வுகளைப் பெற்றுக்கொண்டுக்கவும் அவர் நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

ஜனாதிபதியின் இக்கள விஜய நடவடிக்கைகளை உல்லாசப் பயணக் கைத்தொழில் துறையினர் பெரிதும் வரவேற்றுள்ளதோடு பாராட்டியுமுள்ளனர். அவர்கள் மத்தியில் புதிய நம்பிக்கை ஏற்படவும் வழி வகுத்திருக்கிறது.

இந்நாட்டின் சுற்றுலாத்துறையை உரிய ஒழுங்கில் மேம்படுத்தப்படும் போது அது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பாரிய பங்களிப்பு நல்கும். இந்நாட்டிக்கு அந்நிய செலாவணியைக் கொண்டு வரும் துறைகளில் முக்கிய இடத்தை இத்துறை பிடிக்கும்.

ஆகவே நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிக்கக்கூடிய வகையில் உல்லாசப் பயணத் துறையை மேம்படுத்துவது இன்றியமையாததாகும். அதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# தெற்கு கரையோர பிரதேசங்களில் புத்துயிர் பெறும் சுற்றுலாத்துறை

## தங்காலை, காலி பிரதேசங்களுக்குச் சென்று ஜனாதிபதி நேரில் ஆராய்வு



நாட்டின் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சி காரணமாக சுற்றுலா வலயங்களை அண்மித்த பிரதேசங்களில் வசதிகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தியிருக்கும் அதேநேரம், அது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (17) தங்காலை முதல் காலி வரையுள்ள பல சுற்றுலாத் தலங்களுக்கு நேரடியாக விஜயம் செய்திருந்தார்.

இதன்போது சுற்றுலா ஹோட்டல்களுக்குச் சென்ற ஜனாதிபதி, சுற்றுலாத்துறை சார்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். இதன்போது சுற்றுலாத் துறையினர் சுட்டிக்காட்டிய பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரிகளுடன் தொலைபேசியூடாக



தொடர்பு கொண்டு உடனடியாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்த ஜனாதிபதி, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான யோசனைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

கொவிட் தொற்று காரணமாக உருவான பொருளாதார நெருக்கடியின் விளைவாக இந்நாட்டின் சுற்றுலாத்துறை பெரும் சரிவைச் சந்தித்திருந்த நிலையில், அரசாங்கத்தின் புதிய திட்டமிடல்களின் பலனாக தற்போது நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி 2023 ஆம் ஆண்டில் 1400000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்திருப்பதோடு, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது இரட்டிப்புத் தொகையாகும்.

2017 ஆம் ஆண்டில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருக்கும் நிலையில் அந்த இலக்கையும் கடந்து செல்லும் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டமிடலை அரசாங்கம் கொண்டுள்ளது. அதேபோல் நாளாந்தம் 500 டொலர்களைச் செலவிடும் சுற்றுலாப் பயணிகளுக்கு மாறாக அதனை விடவும் அதிக தொகையைச் செலவிடக்கூடிய உயர்மட்ட சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி சுற்றுலா வர்த்தகச் சமூகத்திற்கு அறிவுறுத்தியதன் பின்னர் புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக தங்களது வர்த்தகச் செயற்பாடுகளில் புதிய பரிணாமத்தை எட்டியிருப்பதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

சீனிமோதர, திக்வெல்ல, நில்வெல்ல, ஹிரிகெட்டிய, வெலிகம, ஹபராதுவ பகுதிகளில் அமைந்திருக்கும் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் வெலிகம அலைச்சறுக்கு பயிற்சிக் கல்லூரிக்கும் விஜயம் செய்து அதன் செயற்பாடுகளை ஜனாதிபதி நேரில் ஆராய்ந்தார். பின்னர் உடவுடன சுற்றுலா வலயத்தில் சுற்றுலாப் பயணிகளுடன் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கான அவர்களது யோசனைகளையும் கேட்டறிந்து கொண்டார். அதனையடுத்து காலி, தங்காலை கடற்கரைகளில் கூடியிருந்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, தனது வருகையை அறிந்து வீதியின் இரு பகுதிகளிலும் கூடியிருந்த மக்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.



இந்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய அனுபவங்கள் பலவற்றை பெற்றுகொடுப்பதற்கான முயற்சிகளில் பல காலமாக ஈடுபட்டு வரும் Jeffry Dobbs என்பவரும் ஜனாதிபதியுடன் இந்த சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டார்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த பாடுபட்டவர் கலாநிதி அஸீஸ்

## நினைவுதின சொற்பொழிவில் பேராசிரியர் சொர்ணராஜா

கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் கல்வியாளர், அரசியல்வாதி, எழுத்தாளர், சமூகசேவையாளர், செனட்டர், கொழும்பு சாஹிரா கல்லூரியின் முன்னாள் அதிபர் ஆகிய வகிபாகங்களை வகித்தவராவார். கலாநிதி அஸீஸின் 50 ஆவது நினைவுதின சொற்பொழிவு கடந்த சனிக்கிழமை கொழும்பு சாஹிரா கல்லூரியின் கபூர் மண்டபத்தில் அஸீஸ் மன்றத்தின் தலைவர் காலித் பாரூக் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலாநிதி அஸீஸ் அவர்கள் பற்றி சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்ட கல்விலாளர் பேராசிரியர் எம். சொர்ணராஜா பிரதான உரையாற்றினார்.

அத்துடன் பொறியியலாளர் ஏ.ஜி.ஏ. பாரி (சர்வதேச திட்டத்தின் ஆலோசகர்) மற்றும் கொழும்பு டைம்ஸ் ஆசிரியர் மற்றும் அரப் நியூஸ் ஆங்கில மொழி சிரேஷ்ட ஊடகவியலாளர் மொஹமட் ரசூல் டீன், வை.எம்.எம். ஏ தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட், வை.எம்.எம்.ஏ முன்னாள் தலைவர் சஹிட் எம். றிஸ்மி ஆகியோரும் உரையாற்றினார்கள்..

இந்நிகழ்வில் சிங்கள மொழியிலான சிங்கள_ முஸ்லிம் ஒற்றுமை பற்றிய நூலை நூலாசிரியர் தேசமான்ய எம்.டி.டி. பீறிஸ் பேராசிரியர் சொர்ணராஜாவிடம் கையளித்தார். அத்துடன் அசீஸ் பற்றி பேராசிரியர் எம். ஏ நுஹ்மான் எழுதிய நூலை கலாநிதி அசீஸின் மகன் முஹம்மது அலி அசீஸ் பிரதம பேச்சாளர் சொர்ணராஜாவிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் கலாநிதி அசீஸ் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள், அசீஸ் மன்ற உறுப்பினர்கள், வை.எம்.எம்.ஏ உறுப்பினர்கள், ஏ.எச்.எம். பௌசி எம்.பி, ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, கொழும்பு சாஹிரா கல்லூரியின் அதிபர் றிஸ்னி மரிக்கார் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் சொர்ணராஜா இங்கு உரையாற்றுகையில், "கலாநிதி அசீஸ் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சேவையாற்றியவர். அவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவரது தந்தை யாழ்ப்பாணம் நகரசபை உறுப்பினராக இருந்தவர். அவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். 1929 இல் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் கற்று இளங்கலை சிறப்புப் பட்டம் பெற்றார்.1933 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு தொடர்வதற்காக இங்கிலாந்து சென்றார்.



அசீஸ் அவர்களின் மகன் அலி அசீஸும் நானும் கொழும்பு றோயல் கல்லூரியில் ஆரம்பப் பிரிவில் தமிழ்மொழி மூலம் கல்வி கற்றோம். அசீஸ் முஸ்லிம் சமூகத்தில் பல கல்வியியலாளர்களை உருவாக்கினார். அரபுத் தமிழ் போன்ற மொழிகளில் அவர் பாண்டியத்தியம் பெற்றார். கிழக்கு மாகாணத்தில் விபுலானந்த அடிகளாருடன் இணைந்து தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தப் பாடுபட்டார்.

அசீஸ் 1940 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்தார். கல்முனை, கண்டி ஆகிய இடங்களில் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றினார். 1948 முதல் 1961 வரை கொழும்பு சாஹிரா கல்லூரியில் அதிபராகப் பணியாற்றினார். 1950 மற்றும் 1960களில் செனட் சபை உறுப்பினராகவும், பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். 1950ஆம் ஆண்டில் அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் சங்கப் பேரவை (வை. எம். எம். ஏ) அமைப்பைத் தோற்றுவித்தார். அவர் பல நூல்களை எழுதியுள்ளார்" எனத் தெரிவித்தார்.

அஷ்ரப் ஏ சமத்,
ஏ.எஸ்.எம். ஜாவிட்...

# அன்னை புவனேஸ்வரி இல்லம் ஊடாக 9 ஆவது ஆண்டாக தொடரும் பணிகள்

இவ்வுலகில் இருந்து நீங்கிய நிலையிலும், புகழுடன் திகழ்பவர்களின் நினைவாக இடம்பெறுகின்ற சமூகசேவைகள் முக்கியமானவை. இத்தகைய பேறு எல்லோருக்கும் கிட்டிவிடுவதில்லை. அவர்களில் ஒருவர்தான் அமரர் புவனேஸ்வரி அவர்கள்.

உயிருடன் வாழ்ந்தபோது குடும்பத்தின் மீது அதிகப் பற்றுடையவராக அன்புமழை பொழிந்தது மட்டுமல்லாமல் அயலவர்கள் மீதும் சமூகத்தின் மீதும் அளவற்ற பாசம் கொண்டு செயற்பட்டதனால் 'புவனேஸ்வரி அக்கா' என்று பலராலும் அன்னை புவனேஸ்வரி அவர்கள் அழைக்கப்பட்டார்.

லண்டனில் தனது பிள்ளைகளுடன் வாழ்ந்த நிலையில் அவரது உயிர் பிரிந்த போதிலும், அவருடைய உள்ளம் என்னவோ அவர் வாழ்ந்த வவுனியா குடியிருப்பு கிராமத்தையும், அதனைச் சூழ்ந்த பகுதிகளிலுமே நாடியிருந்தது. இந்த சமூகப் பற்றின் காரணமாகவே அவரது புகழுடல் அவரது குடும்ப வாரிசுகளினால் குடியிருப்பு இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டு இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டன.

வசதிகள் வாய்ப்புக்கள் இருந்த போதிலும் பிறந்த மண்ணையும் கூடி வாழ்ந்தவர்களையும் நினைவுகூர்ந்து அந்த சமூகத்துடன் ஒன்றித்திருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்ட அன்னை புவனேஸ்வரி அவர்களின் பிள்ளைகள் அவருடைய பூதவுடலை பூந்தோட்டம் மயானத்தில் எளிமையான முறையில் தகனக்கிரியை செய்தனர்.

வவுனியா பூந்தோட்டத்தில் அன்னை புவனேஸ்வரிக்கென ஓர் இல்லத்தை அவரது பிள்ளைகள் அமைத்தனர். அதற்கு 'அன்னை புவனேஸ்வரி' இல்லம்' எனப் பெயர் சூட்டி, பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அன்னை புவனேஸ்வரி இல்லம் தற்போது கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றது. பௌதிக ரீதியாக மட்டுமன்றி கல்வி, மருத்துவம், சமூகநலன் எனப் பல்வேறு வழிகளில் ஆண்டுதோறும் அவருடைய வருடாந்த நினைவுதினத்தன்று சமூகப் பணிகளை ஆற்றி பாதிக்கப்பட்டவர்களையும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களையும் அன்புடன் அரவணைத்து அவர்களுக்கான அத்தியாவசிய உதவிகளை அந்த இல்லத்தின் ஊடாக அவரது பிள்ளைகள் வழங்கி வருகின்றனர்.



அன்னை புவனேஸ்வரியின் பெயரிலான அறப்பணிகள் ஆண்டுதோறும் அவரது நினைவு தினத்தன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய வசதிகள் குறைந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கான மருத்துவ முகாம் ஊடாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கல், பாடசாலைக்குச் செல்வதற்கு வசதியின்றித் தவிக்கும் மாணவர்களின் போக்குவரத்து வசதிக்கான துவிச்சக்கர வண்டிகளை வழங்கல், உயர் கல்வி வாய்ப்பைப் பெற்று பல்கலைக் கழகத்திற்குச் சென்று கல்வி பயில வசதியற்ற மாணவர்களைத் தேடிக் கண்டறிந்து அவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாதாந்த நிதியுதவி வழங்கல் உள்ளிட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அன்னை புவனேஸ்வரி ஞாபகார்த்த உயர்கல்வி உதவி நிதியின் மூலம் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்கள் அரச துறைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் நல்ல நிலையிலான பதவிகளை வகித்து வருகின்றனர். வசதியற்ற மாணவர்களின் பல்கலைக் கழகக் கல்விக்கான நிதியுதவி தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.



இந்த வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான அன்னை புவனேஸ்வரியின் ஒன்பதாம் ஆண்டு நினைவாக நேற்று (18.02.2024) அவர் பெயரிலான அறப்பணிகள் வவுனியா பூந்தோட்டம் நினைவாலயத்தின் இடம்பெற்றன.

# பெற்றோல், டீசலுக்கு விடைகொடுப்பதற்காக மின்சார வாகனத் தயாரிப்பில் இந்தியா தீவிரம்!

இந்தியாவில் பெட்ரோல், டீசல்வாகனங்களால் சுற்றுச்சூழல் மிக கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே மின்சார வாகனங்களின் (Electric Vehicles) பயன்பாட்டை அரசு ஊக்குவித்து வருகிறது. முக்கியமாக பொதுப்போக்குவரத்தில் மின்சார வாகனங்களை அதிகளவில் புகுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த விஷயத்தில் டெல்லி இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது. டெல்லியில் ஏற்கனவே நிறைய எலெக்ட்ரிக் பஸ்கள் (Electric Buses) இயங்கி வருகின்றன. இந்தச் சூழலில், தற்போது புதிதாக 350 எலெக்ட்ரிக் பஸ்கள் அங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் டெல்லியில் இயங்கும் ஒட்டுமொத்த எலெக்ட்ரிக் பஸ்களின் எண்ணிக்கை 1,650 ஆக உயர்ந்துள்ளது.

புதிய மின்சார பஸ்கள் அறிமுக நிகழ்ச்சியில், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் கவர்னர் வினய் குமார் சக்ஸேனா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்தியாவிலேயே அதிக மின்சார பஸ்கள் இயக்கப்படும் நகரம் என்ற பெருமையை டெல்லி பெற்றுள்ளது. இது நிச்சயமாக சுற்றுச்சூழல் மாசுபாடு பிரச்சினையை கட்டுப்படுத்தும் என்று நம்பப்படுகின்றது.



டெல்லியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய மின்சார பஸ்களில் ஜி.பி.எஸ், டிஸ்க் பிரேக்குகள் உட்பட ஏராளமான வசதிகள் உள்ளன. தீ பிடித்தால் அதை கண்டறிந்து 'எலாம்' அடித்து எச்சரிக்கை செய்யும் வசதியும் இந்த புதிய எலெக்ட்ரிக் பஸ்களில் இருக்கிறது. உலகளவில் பார்த்தால் மின்சார பஸ்களை உற்பத்தி செய்யும் பட்டியலில் டெல்லி தற்போது 3 ஆவது இடத்தில் இருக்கிறது.

டெல்லியில் தற்போது புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள எலெக்ட்ரிக் பஸ்களின் Driving Range சுமார் 250 கிலோ மீட்டர் ஆகும். சுற்றுச்சூழல் மாசுபாடு பிரச்சினையை குறைப்பதுடன், மசகு எண்ணெய் இறக்குமதிக்காகச் செலவிடும் தொகையையும் குறைக்க முடியுமென நம்பப்படுகின்றது.

# மானுடவியல்



153

இங்ஙனந்திருப்பதிகத்தை நிறைவித்து, திருக்கடைக் காப்புச் சாத்தித் தொழுதுகொண்டு நின்றார். சிவ பெருமானுடைய பெருங்கருணையைக் கண்டு ஆகாயத்திலே தேவர்களெல்லாரும் புஷ்பமழை பொழிந்தார்கள். சிவபெருமான் தேவதுந்துபிகள் முழங்க, கந்தருவர்களும் கின்னரர்களும் கீதவொலி செய்ய, அரிபிரமேந்திராதி தேவர்களெல்லாரும் தோத்திரம் பண்ண, சிவகணநாதர்கள், ஹரஹர என்று சொல்லும் ஓசை தழைக்க, முனிவர்கள் தேவகோஷத்தோடு பக்கத்திலே சூழ, பார்வதி யாரோடு திருத்தோணிக்கு எழுந்தருளினார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அதைக் கண்டு, அவரைத் தொடர்ந்து எழுகின்ற அன்பு மேலீட்டினாலே தம்முடைய கண் வழியே சென்ற கருத்து நீங்காமற் கலந்து செல்ல, சிவபிரான் எழுந்தருளிய திருக்கோயிலினுள்ளே பிரவேசித்தார். அந்தகோடி சிவபுண்ணியங்களைச் செய்து அப்பிள்ளையாருக்குப் பிதாவாயிருக்கப் பெற்றுக் கொண்ட சிவபாதவிருதயர் கைகுவித்து ஆனந்தக் கூத்தாடி, வெருட்சியும் வியப்பும் விருப்பும் அடைந்து, அவர் திருவாய் மலர்ந்தருளிய திருநெறித் தமிழின்பொருளை உணர்ந்தார். பரமசிவனைத் தனியே கண்டு தொடர்ந்த பிள்ளையாரைப் போலக் காணப்பெற்றிலராயினும், அங்கு நிகழ்ந்த அற்புதத்தைக் கண்டு, அது தோணியப்பருடைய திருவருளெனத் துணிந்து பேரானந்தத்தோடும் முன் சென்ற பிள்ளையாருக்குப் பின் சென்றார். அப்பொழுது அங்கே நிகழ்ந்ததைக் கேள்வியுற்ற பிராமணர்களெல்லாரும் உரோமப்புளகங் கொண்டு "இதற்கு ஒப்பாகிய அற்புதம் எங்கே நிகழ்ந்தது" என்று சொல்லிக்கொண்டு, திருக்கோயில்வாயிற்புறத்திலே வந்து சூழ்ந்தார்கள். பிள்ளையார் திருத்தோணியில் வீற்றிருந்தருளிய சிவபிரானை அடைந்து திருப்பதிகம்பாடி, திருக்கோயிலினின்றும் புறப்பட்டார். அது கண்ட பிராமணர்களும் மற்றையோர்களும் எதிர்கொண்டுவந்து நின்று, தோத்திரம் பண்ணி, பூமியிலே விழுந்து அவருடைய திருவடிகளை நமஸ்கரித்து, எழுந்தார்கள்.



சிவபாதவிருதயர் பிள்ளையாரை எடுத்து, தோளின்மேலே வைத்துக்கொண்டு, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய, சிவனடியார்களெல்லாரும் ஸ்தோத்திரம் பண்ண, சீர்காழியை வலஞ்செய்துகொண்டு, தம்முடைய திருமாளிகையை அடைந்தார்.

**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# மாசி மகம்

தமிழ் மாதங்களில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு தனிச்சிறப்பு இருப்பது போன்று மாசி மாதத்திற்கும் பல சிறப்புகள் உள்ளன. மாசி மாதத்தை கடலாடும் மாதம் என்றும், தீர்த்தமாடும் மாதம் என்றும் சொல்லுவதுண்டு. மாசி மாதம் இறை வழிபாட்டிற்கும், தான தர்மங்கள் செய்வதற்கும் ஏற்ற மாதமாக சொல்கிறார்கள். மாசி மாதத்தில் பௌர்ணமியும், மகம் நட்சத்திரமும் இணைந்து வரும் நாளை மாசி மகம் என கொண்டாடுகிறோம். இந்த சிறப்புமிக்க நாளில் என்னென்ன காரியங்களை செய்தால் நம்முடைய பாவங்கள் நீங்கி, அளவில்லாத புண்ணிய பலன்களை பெற முடியும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.



**மாசி மகத்தன்று அன்னதானம் வழங்குவது மிகவும் சிறப்பானதாகும். முடிந்த வரை இரண்டு நபர்களுக்காவது அன்னதானம் வழங்கலாம்.**

**மாசி மகத்தன்று செய்ய வேண்டியவை :**

மாசி மகத்தின்று அனைத்து நீர் நிலைகளிலும் அமிர்தம் கலந்திருப்பதாக ஐதீகம். இதனால் கடல், புனித நதிகள் ஆகியவற்றில் இந்த நாளில் நீராடுவது சிறப்பானது. இந்த நாளில் புனித நீராடினால் தெரிந்தும், தெரியாமலும் நாம் செய்த பாவங்கள் விலகும். சுபிட்சம் பெருகும். புனித நதிகளில் நீராட முடியாதவர்கள் தங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள கோவில் குளங்களில் நீராடி இந்த பலன்களை பெற முடியும்.

மாசி மகத்தன்று அன்னதானம் வழங்குவது மிகவும் சிறப்பானதாகும். முடிந்த வரை இரண்டு நபர்களுக்காவது அன்னதானம் வழங்கலாம். மனிதர்களுக்கு உணவு வழங்க முடியா விட்டாலும் காகம், நாய், பூனை போன்றவற்றிற்கும் உணவு வழங்கலாம்.



## சைவ மஞ்சரி

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகோற்சவம், பஞ்சரத பவனி

**டி. வசந்தகுமார் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

மாத்தளை நகரத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவம் கடந்த 02.02.24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இவ் விழாவானது பகல் இரவு திருவிழாக்களாக நடைபெற்று வருகின்றது.

24.02.24 ஆம் திகதி பஞ்ச ரத பவனி நடைபெறும். வடக்கு நோக்கி 108 அடி நவதள நவ கலசம் கொண்ட நவதள இராஜ கோபுரத்தை கொண்ட வரலாற்றுப் பெருமையை மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் பெற்றுள்ளது. இவ்வாலயம் கொழும்பிலிருந்து 144 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருக்கின்றது.

வடக்கையும் மலையகத்தையும் இணைக்கும் ஒரு கேந்திர தளமாக மாத்தளை மாநகர் விளங்கி வந்திருக்கின்றது. ஆங்கிலேயேர் ஆட்சிகாலத்தில் பெருந்தோட்டத்துறைக்கு இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் அழைத்து வரப்பட்டபோது 'தலைமன்னார்' :''அரிப்பு' இறங்கு துறையூடாக அழைத்து வரப்பட்டு மலையக தலைவாசலான பண்ணாகமம் என்று அப்போது அழைக்கப்பட்டு வந்த மாத்தளையை வந்தடைந்தனர்.

ஆதியில் மன்னாரிலிருந்து காட்டு வழியாக கால் நடையாக பெரும் துன்பப்பட்டு மாத்தளையை வந்தடைந்த மக்கள் இங்கிருந்த சிறு சிறு குழுக்களாக மலையக பெருந்தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அப்படி பெருந்தோட்டங்களில் குடியேற்றப்பட்ட மக்களே இந்திய வம்சாவளி மக்களாவர்.

இம் மக்களின் உழைப்பாலேயே மலையகம் இன்று செழிப்பாக இருப்பதற்குக் காரணமாகும். இப்படி சிறு சிறு குழுக்களாக மலையகமெங்கும் வியாபித்த மக்கள் மாத்தளையிலும் குடியேறினர்.

எங்கும் வியாபித்த அடியவர்களுக்கு அருள் மழை பொழியும் அன்னை பராசக்தியான ஸ்ரீ முத்துமாரியம்பிகையானவள் ஒரு சிகை அலங்காரம் செய்யும் ஒருவரிடத்தில் கனவில் தோன்றி தன் திருஉருவத்தை ஒரு வில்வமரத் தடியில் வெளிப்படுத்தித் தன்னை பூஜிக்கமாறு கேட்டுக் கொண்டதிற்கிணங்க அன்றிலிருந்து அவ் வில்வ மரத்தடியில் சிலை. வைத்து வணங்கி வந்தாக ஆரம்ப கர்ண பரம்பரைக் கதைகளும் ஏடுகளும் சான்று பகர்கின்றது.



**ஏழில் மிகு இயற்கை சூழலையும் பௌதீக வளங்களையும் கொண்ட பண்ணாகாமத்தில் சிறுகொட்டில் அமைத்து வழிபட்ட ஆலயம் இன்று மாடமாளிகையாக வளர்ச்சிப் பெற்று விளங்குவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.**

இப் பூர்வீக மக்களால் ஸ்தாபிக்கப்பட்ட இவ் வாலயத்தின் ஆரம்பகாலம் சரியாக குறிப்பிட முடியா விட்டாலும் பல்லாண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்தது என யூகித்தக் கொள்ளலாம்.

முன்பு கூறியது போன்று அடியார் ஒருவருக்கு அம்பிகை கனவில் காட்சி கொடுத்துத் தன்னை பூஜிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க அவ்விடத்தில் கற்சிலை வைத்து வணங்கி வந்த சக்திவாய்ந்த அம்பிகைக்கு ஆலயம் ஒன்று அமைக்க எம்மவர்களுக்கு வாய்ப்புகிட்டியமை பெரும் பாக்கியமே. ஏழில் மிகு இயற்கை சூழலையும் பௌதீக வளங்களையும் கொண்ட பண்ணாகாமத்தில் சிறுகொட்டில் அமைத்து வழிபட்ட ஆலயம் இன்று மாட மாளிகையாக வளர்ச்சிப் பெற்று விளங்குவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இத் திருவிழா காலத்தில் தினமும் காலை 11.00 மணிக்கும் மாலை 7.00 மணிக்கும் சுவாமி உள் வீதி வெளிவீதி திருவிழாக்கள் நடைபெறும் .

23.02.24 காலை 7.00 மணிக்கு சுடுகங்கை ஸ்ரீ ஏழு முகக் காளியம்மன் கோவிலிலிருந்து காவடி ஊர்வலம் புறப்படும் காலை 10.00 மணிக்கு தீமிதிப்பும் பகல் 11.00 மணிக்கு ஸ்ரீ சிவனடியார் திருவிழாவும் வசந்த மண்டப பூசையும் பி.ப.1.00 மணிக்கு மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) அன்றிரவு திருச்சூரகத் திருவேட்டைத் திருவிழாவும் நடைபெறும்.

24.02.24 காலை 8.00 மணிக்கு இரத்தோற்சவ வசந்த மண்டப பூசை நடைபெறும். 25.02.24 மாலை 7.00 மணிக்கு கற்பூரத் திருவிழா நடைபெறும்.

26.02.24 காலை 8.00 மணிக்கு பாற்குட பவணியும் காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 7.00 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

27.02.24 காலை 11.00 மணிக்கு ஸ்ரீ சண்டேஸ்வரி உற்சவமும் மாலை 6.00 மணிக்கு பூங்காவன உற்சவமும் நடைபெறும். இந்திரு விழாவுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இன, மத, பேதமின்றி எல்லா இன மக்களும் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்க விடயமாகும்.


# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 76



கஷ்ட காலங்களில் மனிதன் வீணாக கலங்கியும், அமைதியின்றியும் தனது ஆற்றலை வீணடித்து விடுகிறான். அவ்வாறு அவன் வீணடிக்கும் ஆற்றலின் ஒரு பகுதியை நிதானமாக அமைதியுடன் சிந்தித்து செயலாற்றினால் எவ்வளவு பெரிய துன்பத்திலிருந்தும் மிக எளிதாக அவன் வெளிவர முடியும். துன்பம் வந்ததும் துவண்டு விடக்கூடாது. துன்பத்தை வெல்லும் வழியை யோசிக்காமல், துவண்டு போய் தம் திறமைகளை வீணாக்கக் கூடாது. எதிர் கொள்ள வேண்டிய கடமைகளை ஆற்றாமல், என்ன செய்வது', 'எங்க போவது 'எப்படி தப்பிப்பது' என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் நமக்கு வந்த சிறு துன்பம் கூட நூறு மடங்கு வளர்ந்து விடும். வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.


அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது. பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.

நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான். நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது. தீய எண்ணம் கொண்டவனின் விருப்பம், நஞ்சு போல் நம் சக்தியினை அழித்து விடும்.



# அறநெறி அறிவுநொடி

**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்



*19575) உலகின் முதல் தமிழ் பேராசிரியர் யார்?*

**முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார்**

*19576) சுவாமி விபுலானந்த அடிகளார் இந்தியாவில் எந்த தமிழ் சஞ்சிகைக்கு பிரதம ஆசிரியராக இருந்தார்?*

**"இராமகிருஷ்ண விஜயம்"**

*19577) சுவாமி விபுலானந்த அடிகளார் இந்தியாவில் எந்த ஆங்கில சஞ்சிகைக்கு பிரதம ஆசிரியராக இருந்தார்?*

**"பிரபுத்த பாரத " "வேதாந்த கேசரி"**

*19578) இவர் எத்தனையாம் ஆண்டு காலத்தில் பிரதம ஆசிரியராக இருந்தார்?*

**1924 களில்**

*19579) இவர் கொழும்பில் இருந்து வெளிவந்த எந்த இதழின் ஆசிரியராக பணியாற்றினார்.*

**"விவேகானந்தன்" என்ற இதழின்**

*19580) தமிழ் கூறும் நல்லுலகம் போற்றுகின்ற 'யாழ்நூல்' என்னும் பொக்கிசத்தைத் தரணிக்குத் தந்தவர் யார்?*

**சுவாமி விபுலானந்தர்**

*19581) சுவாமி விபுலானந்தர் எந்த மாகாணத்தில் அவதரித்தார்?*

**கிழக்கு**

*19582) கிழக்கிலங்கையின் எந்த ஊரில் பிறந்தார்?*

**காரைதீவில்**

*19583) சுவாமி விபுலானந்தர் எப்போது அவதரித்தார்?*

**1892.03.27**

*19584) சுவாமி விபுலானந்தரின் பெற்றோர் யார்?*

**சாமித்தம்பி கண்ணம்மை**

*19585) சுவாமி விபுலானந்தர் எந் நாமத்தோடு அவதரித்தார்?*

**'தம்பிப்பிள்ளை'**

*19586) 'தம்பிப்பிள்ளை'க்கு பெற்றோர் சூட்டிய பெயர் என்ன?*

**'மயில்வாகனன்'**



வரலாற்று சிறப்பு மிக்க உடப்பு சிறுகடல் , பாலத்தருகில் அமைந்துள்ள ஸ்ரீஆஞ்சநேயர் சுவாமி ஆலயத்தின் வருடாந்த தைப்பொங்கல் விழா சனிக்கிழமை (10) இடம்பெற்றது. இதன் போது பக்தர்கள் அர்ச்சனைத் தட்டு வழங்கி பொங்கலில் ஈடுபட்டனர். (உடப்பு குறூப் நிருபர் )

## தேசிய அரசு அமையுமானால்...

சர்வதேச விளையாட்டு வீரர்களை உருவாக்கிய கண்டி, மடவளை பஸார் பிரதேசத்தில் தனியார் அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'எக்சன்' உள்ளக விளையாட்டரங்கின் திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அவர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக நடைபெறும் என்ற நிலைமை காணப்படுமாயின், நாம் ஓர் அங்கமாக இருக்கும் எமது ஐக்கிய மக்கள் சக்தி தமக்கான பெரும்பான்மைகளை சுவீகரித்துக் கொள்ளும் வகையில், பல முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிவருமென தெரிவித்த தலைவர் ரவூப் ஹக்கீம், தேர்தலுக்கு பின் எல்லா கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைப்பதற்கான ஒரு முயற்சியை மேற்கொள்வதுதான், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சனைக்கு தீர்வாக அமையுமென தான் நம்புவதாகவும் அவர் வலியுறுத்தினார்.

இன்று இருக்கின்ற பாராளுமன்ற சமன்பாட்டை வைத்து ஒரு தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்க முடியாது. ஏனெனில் இன்று பாராளுமன்ற நிலைப்பாடு மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சமன்பாடாகும். இதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.தேசிய அரசாங்கம் என்று மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், பெரும்பான்மை உள்ள ஒரு அரசாங்கத்தை அமைப்பதன் மூலம் மக்கள் ஒருபோதும் திருப்தி காணப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை (16) மாலை நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் திலின பண்டார தென்னகோன், ஹிதாயத் சத்தார் அகில இலங்கை மொத்த மற்றும் சில்லறை வியாபார சங்கத்தின் தலைவர் டபிள்யூ.எம். நஜீம் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

## அத்துமீறும் தமிழக மீனவர்களால்...

வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார். அதேவேளை, இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழையும்போது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தால், அதற்காக அவர்கள் கச்சதீவைக்கோருவது ஏற்புடையதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைய நாட்களாக இலங்கைக் கடற்பரப்பினுள் நுழையும் இந்திய இழுவைப் படகுகளை, இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றி அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

தமிழ் நாட்டிலும், இந்திய பாராளுமன்றத்திலும், இந்திய மீனவர்களின் கைதுக்கு எதிராகக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டதுடன், கச்சதீவை மீளக் கோரும் கருத்துக்களும் வலுப்பெற்றிருந்தன.

இது தொடர்பில் வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானிடம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது இரண்டு நாடுகளுக்கிடையிலான பிரச்சினையாகும். இருந்தாலும் இருநாடுகளும் ஒற்றுமையாகச் செயற்பட்டு இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வைக் காணவேண்டும்.

அயல் நாடான இந்தியாவும், எமது நாடும் சகோதரர்களைப்போன்றது. இவ்வாறிருக்கும்போது சில பிரச்சினைகள் ஏற்படும். இதற்காக இவ்வாறான கருத்துக்களை கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இந்திய மீனவர்கள் இவ்வாறு இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைவதால் இலங்கை மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். குறிப்பாகத் தமிழ் நாட்டையும், எம்மையும் எடுத்துக்கொண்டால் நாம் மொழியாலும் ஒன்றுபட்டவர்களாகக் காணப்படுகின்றோம்.

அந்த அடிப்படையில் உண்மைத் தன்மையை உணர்ந்து எமது மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு இந்திய மீனவச் சகோதரர்களும் இதனைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

தொடர்ந்தும் இணக்கமாக நாமும் இந்தியாவும் சகோதரப் பாசத்துடன் செயற்படும்வகையில் அவர்களுடைய கருத்துக்களும் இருக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## அனைவரும் பயன் பெறக்கூடிய...

பின்னரான காலத்திலும் அபிவிருத்தியடைந்த நாடே, தனது நோக்கமாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், துரதிஷ்டவசமாக இந்த நோக்கம் இன்னமும் நிறைவேறவில்லை. இதன் காரணமாக நாங்கள் காணவிரும்பும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இறுதியாக ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'மவ்பிம ஜனதா கட்சி'யின் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

என்னை சுற்றியுள்ள அனுபவம் மிக்க அரசியல்வாதிகள் மற்றும் எனக்கு ஆதரவாகவுள்ள குறிப்பிடத்தக்க இளம் தலைமுறையினருடன் இணைந்து நான், அரசியலில் ஈடுபடத் தீர்மானித்துள்ளேன். நாட்டுக்கு மிகச்சிறந்த பங்களிப்பை வழங்குவதே இதன் நோக்கமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 75 வருடங்களாக அரசியலில் நோக்கம் என்ற எதுவுமிருக்கவில்லை. அனைவரும் பயன்பெறக்கூடிய மாற்றங்களை கொண்டுவர எண்ணியுள்ளோம். வரலாற்று ரீதியாக நாங்கள் ஏற்கனவே உள்ள அரசாங்கங்களை மாற்றுவதற்காக புதிய அரசாங்கங்களை பதவியில் அமர்த்தி வந்துள்ளோம். ஆனால் அதிலிருந்து நாங்கள் வித்தியாசமானவர்கள். புத்திஜீவிகளுடனான கலந்துரையாடல்கள் கருத்துப் பரிமாற்றங்கள், ஆராய்ச்சிகள் மூலம் அனைத்து இலங்கையரின் வாழ்க்கையிலும் சாதகமான மாற்றங்களை உருவாக்க எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தொழில்முனைவோரது நாட்டை உருவாக்குவதே எங்கள் இலக்கு. கிராம மட்டத்திலுள்ள தொழில்முனைவோரை தேசத்தின் மிகப்பெரிய தொழில்முனைவோராக மாற்றுவதற்கான திட்டங்களை நாங்கள் முன்னெடுப்போமென தெரிவித்துள்ள திலீத் ஜயவீர, வழமையான பாரம்பரிய தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு பதில் உங்கள் எதிர்காலத்துக்கான முழுமையான திட்டமொன்றை உருவாக்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சமாதான நீதவான்...

பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், கடந்த 13.02.2024 இல், நீதி அமைச்சரால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த நிபந்தனையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

அதன்படி, சமாதான நீதவான் நியமனத்தைப் பெறுவதற்கு கல்வித் தகைமையாக இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் பரீட்சைக்கு தோற்றி, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 02 திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இக் கல்வித் தகுதியை பெற்றிராத ஒருவரான , பிரசித்தமான மதத் தலைவரோ அல்லது சங்கத் தலைவரோ சமாதான நீதவானாக நியமிக்கப்பட தகுதியானவரென பரிந்துரை செய்யும் பட்சத்தில், நீதி அமைச்சருக்கு, அவரை சமாதான நீதவானாக நியமிக்க முடியுமென புதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விமானப்படையின்...

இதன் ஓர் அங்கமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 73 பாடசாலைகள், சுமார் நூறு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருவதாக விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்தார். அத்துடன் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் மார்ச் (06) முதல் (10) வரை எயார் டெட்டோ 2024 என்ற மாபெரும் தொழில்நுட்ப மற்றும் கல்வி கண்காட்சி இடம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை விமானப்படையின் 73 ஆம் ஆண்டு நிறைவு எதிர்வரும் மார்ச் மாதம் 02 இல்,கொண்டாடப்படுகிறது.

## CCTV கெமராக்களில்...

இதனுடன் தொடர்புடையவர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு சுமார் 300 பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் கடந்த வருடம் 26,000 வழக்குகள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்துள்ளார்.

## சகல ச.தொ.சக்களிலும்...

சகல கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களிலும் இம்முட்டைகளை கடந்த (16) முதல் பெற்றுக்கொள்ளும் வகையில், இவை ஒவ்வொரு நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நுகர்வோருக்கு பாதிப்பின்றி இவற்றை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தலைவரின் கட்டுப்பாட்டில்...

பலவீனப்படுத்துகின்றாரென்றும் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவே மக்கள் விடுதலை முன்னணியினரால் அதிகளவு மக்கள் ஆதரவை பெறமுடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சி தலைவருக்கு அப்பால் வேறு இருவரின் கட்டுப்பாட்டின் கீழ் கட்சி உள்ளதென்பதை நான் தெரிவிக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ள சம்பிக்க ரணவக்க, அவர்கள் யார் என்பதை நேரம் வரும்போது வெளியிடுவேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது தற்போது குடும்ப வர்த்தகமாக மாறியுள்ளது. கட்சிக்குள் கடும் அதிருப்தி நிலவுகின்றது.

ஜனநாயகம் என்ற எதுவும் கட்சிக்குள் இல்லை எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இதேவேளை ஜனாதிபதியின் உரை குறித்து பாராளுமன்ற விவாதம் நடைபெற்றவேளை தனக்கு உரையாற்றுவதற்காக சந்தர்ப்பத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் வழங்காதமை குறித்து பண்டாரகமவில் நடைபெற்ற அரசியல் கூட்டத்தில் சம்பிக்க ரணவக்க கடுமையாக சாடியுள்ளார்.

நான் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் போட்டியிட்டது உண்மை. தற்போது நான் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினராக செயற்படுகின்றேன்.

நான் உரையாற்றுவதற்கான அனுமதியை கோரியவேளை எதிர்கட்சிதலைவரினால அது நிராகரிக்கப்பட்டுவிட்டதாக லக்ஸ்மன்கிரியல்ல எம்.பி தெரிவித்தார் என சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

## 37ஆவது மாநாடு இன்று...

ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 35 நாடுகளைச் சேர்ந்த விவசாய அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டில் பங்கேற்பதற்காக 35 நாடுகளின் (17) அரச பிரதிநிதிகள் இலங்கை வருகின்றனர். ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கு டோங்யு 18ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ளார்.

மாநாட்டில் சீனா, மலேசியா, ஜப்பான், பாகிஸ்தான், பங்களாதேஷ் முதலான பல நாடுகளின் விவசாய அமைச்சர்கள் பங்கேற்கவுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

## டி.ஆர்.விஜேவர்தனவின்...

நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் (21) இரவு 9.00 மணிக்கு சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும். கோட்டை ஸ்ரீ சம்புத்தலோக்க விஹாரை மற்றும் ஹுனுபிட்டிய கங்காராம விஹாரையின் தேரர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர் . சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வுக்கு தேரர்களை அழைத்து வரும் பெரஹர அன்று இரவு 8.45 மணிக்கு கோட்டை ஸ்ரீ சம்புத்தலோக்க விஹாரையிலிருந்து ஆரம்பமாகும்.

இந்த சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வு தேசிய தொலைக்காட்சியிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் நேரடியாக ஒளி, ஒலிபரப்பு செய்யப்படும். மறுநாள் (22) தானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

## 300 ஏக்கர் விவசாயக் காணிகள்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் விவசாய காணிகள் விடுவிப்பு, இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள ஆலயங்களுக்கு வழிபட அனுமதிப்பது தொடர்பிலும் ஆராய்ப்பட்டபோதே ஜனாதிபதியின் உத்தரவு தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதேவேளை, 300 ஏக்கர் விவசாய காணிகள் இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பது குறித்து இராணுவத்தினர் தற்போது அறிவித்துள்ளனர். யாழ்ப்பாணம் வறுத்தலைவிளான், காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி வீதி இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. அத்துடன் பலாலி கிழக்கு பகுதியிலுள்ள காணிகளை விடுவிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் இராணுவத்தினர் யாழ். அரச அதிபருக்கு அறிவித்ததன் பின்னர் அதற்கான முன்னேற்பாடுகள் எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாரத்லங்கா 10,000...

களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய 10 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 45 தோட்டங்களில் இன்று (19) நிர்மாணப் பணிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறுகிறது.

இதன் பிரதான நிகழ்வு இன்று (19) காலை 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரின் பங்கேற்புடன் நிகழ்நிலை மூலம் பிரதான நிகழ்வு நடைபெறும்.

அதேபோல 45 தோட்டங்களுக்கும் மக்கள் பிரதிநிதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மிகவும் நேர்த்தியான முறையில் அமைச்சர் ஜீவன் தொண்டமானால் நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

## காமினி ஜயவிக்கிரம பெரேராவின்...

1941ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி பிறந்த காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஐ.தே.க. வின் முன்னாள் தவிசாளர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சரும் ஆவார். கிராம சபை உறுப்பினரான இவர், 1968 முதல் தீவிர அரசியலில் ஈடுபட்டார். 1977 இல் பாராளுமன்ற உறுப்பினரான இவர், 1978 இல் குருநாகல் மாவட்ட அமைச்சராக செயற்பட்டார்.

1987 இல் வடமேல் மாகாண சபை முதலமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். 1994 இல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இவர், 1998 இல் எம்.பி. பதவியை இராஜினாமா செய்தார். இறுதியாக 2000ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவின் நலன் விசாரிப்பதற்காக கடந்த பெப்ரவரி 11) கட்டுகம்பலையிலுள்ள அவரின் இல்லத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தார்.

இதன்போது முன்னாள் அமைச்சரின் நலன் பற்றி விசாரித்த ஜனாதிபதி, அவருடன் சிறிது நேரம் உரையாடலிலும் ஈடுபட்டதோடு, குடும்ப உறுப்பினர்களிடம் அவர் பற்றிய தகவல்களை கேட்டறிந்தார்.

இச்சந்திப்பில் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், காமினி ஜயவிக்ரம பெரேராவின் புதல்வரும் வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அசங்க ஜயவிக்கிரம, குருநாகல் மாவட்ட அரசியல்வாதிகள், பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்டோர் இணைந்திருந்தனர்.

## பொலிஸ் அதிகாரத்தை...

சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்துக்கான தனிநபர் பிரேரணை தொடர்பாக,

கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் தக்க வைக்கப்பட வேண்டும்.

இதிலும் பார்க்க மேலதிக அதிகாரங்களை பெற்றுகொள்ளும் வகையிலும் ஈ.பி.டி.பி. தொடர்ச்சியாக உறுதியுடன் செயற்பட்டு வருகிறது.

எனினும், அரசியல் ரீதியான நோக்கங்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில,தனி நபர் பிரே ரணையை சமர்ப்பித்துள்ளார். இது பாராளுமன்ற விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், அதிகப் படிமுறைகளை தாண்டி வரவேண்டியுள்ளது. தற்போதைக்கு அது சாத்தியமில்லை என்றே நான்,கருதுகிறேன்.

ஒருவேளை, இந்த முயற்சி தொடர்ந்தும் முன்னகருமாக இருந்தால், நாம் உருவாக்கி வைத்துள்ள தேசிய நல்லிணக்கத்தை பயன்படுத்தி, அதனை தடுப்பதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய பலன்கள்

### (19.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
சகோதரவர்க்கத்தினரால் நன்மைகள் கிடைக்கும். உங்கள் கூட்டு முயற்சிக்கு அவர்கள் உறுதுணையாக இருப்பர்.

**ரிஷபம் :**
தொழில் வளர்ச்சி கூடுதலாபம் தொல்லை தந்த எதிரிகள் விலக்குதல் போன்றவை நடைபெற்று மகிழ்ச்சியளிக்கும்.

**மிதுனம்:**
நினைத்ததை நினைத்து நேரத்தில் செய்யக்கூடிய வாய்ப்பு உருவாகும். நிகழ்கால தேவை பூர்த்தியாகும்.

**கடகம்:**
நிறைந்த தன லாபம் கிடைக்கும். விபரீத ராஜயோக அடிப்படையில் திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றிகளை காணலாம்.

**சிம்மம்:**
கல்வி கலைத்துறை சம்பந்தமாக எடுத்த முயற்சிகளிலும் அனுகூலம் உண்டு. பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் இருந்த தடை அகலும்.

**கன்னி:**
அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு நல்ல பலன்களை காண்பீர்கள். வருமானம் உயர வழி பிறக்கும்.

**துலாம்:**
பலவித வளிகளிலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும் . முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கலாம்.

**விருச்சிகம்:**
அரசியல் களத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும் .கேட்ட சலுகைகளை வழங்க அரசாங்கம் முன் வரும் நேரம் இது.

**தனுசு:**
குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். வருமானம் உயரப் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**மகரம்:**
புனித பயணங்கள் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். நண்பர்கள் நம்பி ஒப்படைத்த பொறுப்புக்கள் நல்ல விதமாக முடியும்.

**கும்பம்:**
பூர்வீக சொத்த பிரச்சினைகள் அகலும். பிரபலங்களின் நட்பால் பெருமை காண்பீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**மீனம்:**
நல்ல பலன்கள் பலவும் நடைபெறும். எனவே இது போன்ற நேரங்களில் கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும்.

## இந்தியா தொடர்பான... (03ஆம் பக்க தொடர்ச்சி)

தற்காலிகமாக இந்த மாற்றம் ஏற்பட்டாலும் அவர்களிடம் ஒரு நிரந்தரமன சிறந்த கொள்கை இல்லை. இதற்கு இந்த நிலைப்பாடு சிறந்த உதாரணமாகும்.

எவ்வாறெனினும், இந்தியாவுக்கு எதிரான கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டிருப்பது சாதகமான விடயமாகும்.

எதிர்காலத்தில் இந்தியாவினால் இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதென, நம்பிக்கை கொள்ளலாம்.

அந்த வகையில் இந்தியா இலங்கைக்கு வழங்கும் ஆதரவை அதிகரிக்க வாய்ப்புள்ளது. கொள்கைகளுக்கு வாக்களித்தமைதான் நம் நாடு, இந்த நிலைக்கு உள்ளாக காரணமானது.

ஆனால், நாட்டிற்கு வெற்றியைத் தரும் வாய்ப்புகளை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்பதே எமக்கு எப்போதும் இருந்து வரும் எண்ணமாகும்.

மேலும், கொள்கைகளை மாற்றுவதற்கான சிறந்த எடுத்துக்காட்டு அண்மைக்காலமாக பஸ்வண்டிகளில் மக்களை ஏற்றி கூட்டத்தை நடத்தும் மக்கள் முன்னணியின் செயற்பாடுகளை குறிப்பிட முடியும். அவர்களின் ஐந்து கொள்கைகளின் ஒன்று இந்திய எதிர்ப்புக் கொள்கையாகும்.

அவ்வாறான கொள்கையினால் பல்லாயிரக்கணக்கானவர்களை கொன்று குவித்துவிட்டு இப்போது கொள்கையை மாற்றி விட்டதால் பறிபோன உயிர்களை மீண்டும் பெற முடியாது.

## சட்டங்களின் பிரச்சினைகளை...

ஆழமான தெளிவை பெற்றுக் கொள்வதற்காக இப்பிரதிநிதிகள் குழு வருகை தந்துள்ளதாக, அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது X தள (டுவிட்டர்) பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் ஆராயவும், நிகழ்நிலை காப்புச் சட்டம் உள்ளிட்ட அண்மைய சட்டங்களுடன் தொடர்புடைய சிக்கல்கள் குறித்து கலந்துரையாடவும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை இக்குழுவினர் சந்திக்கவுள்ளதாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது X தள பதிவில் தெரிவித்துள்ளார்.

## கட்சி செயலர்களுக்கு...

இதன்படி, பதிவு செய்யப்பட்டுள்ள 80 அரசியல் கட்சிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் தேர்தல் ஆணைக்குழு தலைவரை அடுத்த வாரம் சந்திக்கவுள்ளனர்.

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதுடன், அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டியுள்ளது. தேர்தல்கள், வாக்காளர் பதிவு தொடர்பிலான பிரச்சினைகள் குறித்தும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட உள்ளது. இச்சந்திப்பு இம்மாதம் 27 அல்லது மார்ச் மாதம் 06 இல், நடைபெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## உயர்மட்ட சுற்றுலா...

உரிய அதிகாரிகளைத் தொலைபேசியூடாக தொடர்பு கொண்ட ஜனாதிபதி,

உடனடியாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தார்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான யோசனைகளையும் அவர் கேட்டறிந்தார்.

கொவிட்19 பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாட்டின் சுற்றுலாத்துறை பெரும் சரிவை சந்திருந்த நிலையில், அரசாங்கத்தின் புதிய திட்டமிடல்களின் பலனாக தற்போது நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்படி 2023 ஆம் ஆண்டில் 7,489,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்திருந்தனர், 2022 உடன் ஒப்பிடுகையில் இது இரட்டிப்புத் தொகையாகும்.

2017 இல், 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருந்த நிலையில் அந்த இலக்கையும் கடந்து செல்லும் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டமிடலை அரசாங்கம் கொண்டுள்ளது.

அதேபோல் நாளாந்தம் 500 டொலர்களைச் செலவிடும் சுற்றுலாப் பயணிகளுக்கு மாறாக, அதனை விடவும் அதிக தொகையைச் செலவிடக்கூடிய உயர்மட்ட சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

# கிழக்கின் குரல்



# பேத்தாழை பொது நூலகத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு







கோறளைப் பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கி வரும் பேத்தாழை பொது நூலகத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை (17)

பேத்தாழை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கோறளைப்பற்று பிரதேச சபை செயலாளர் ச.நவநீதன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.இந்நிகழ்வில் பிரதம அததியாகக் கலந்துகொண்டகிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார். மேலும், பேத்தாழை பொது நூலகம் மற்றும் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம் இணைந்து நடாத்திய அறிவுத்தேடல் கலை இலக்கிய வினா விடைப்போட்டிகளின் இறுதி நிகழ்வுகளும் இங்கு நடைபெற்றன.

கல்குடா கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட இவ்விறுதிப் போட்டியில், கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசாரபீட விரிவுரையாளர் ஜீ.பால்ராஜ், கிழக்குப் பல்கலைக்கழக கல்விமாணி சிறப்புக் கற்கை மாணவன் கே.பிரசாந் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வறிவு சார் போட்டியில் வாழைச்சேனை இந்துக் கல்லூரி மற்றும் கிரான் மத்தியகல்லூரி மாணவர்கள் பங்குபற்றியிருந்த நிலையில், கிரான் மத்தியகல்லூரி மாணவர்கள் வெற்றியீட்டினர்.

இவர்களுக்கான வெற்றிச் சின்னமாக பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் தனித்துவ பாராட்டுச் சின்னமான "மகரயாழ்" மகுடம் வழங்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் இதை வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கோறளைப் பற்று பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்த,ர் அ.ஹாரூன் மற்றும் கிராம உத்தியோகத்தர்,

பிரதேச பாடசாலை அதிபர்கள், பேத்தாழை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் (தெற்கு), பாலர் பாடசாலை ஆசிரியர்கள், பிரதேச நூலகப் பொறுப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

# இறைவனின் படைப்புக்கள் சகலதிலும் கலையுணர்வுகள் இழையோடியுள்ளன

## அஸ்ஸிராஜ் ஜூனிய கல்லூரி விழாவில் அதாஉல்லா எம்பி.

(ராஜகிரிய குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் ஜூனிய கல்லூரியில் தரம் ஐந்து புலமையாளர்களைப் பாராட்டும் "கீர்த்தியொளி" விழா கடந்த (17) சனிக்கிழமை அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் பாடசாலை அதிபர் ரினோஸ் தலைமையில் இடம்பெற்றது. தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ,எல்,எம்,அதாஉல்லா இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மாணவர்களின் அரங்காற்றுக் கலைகள் மேடையேற்றப்பட்டதுடன்,தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பரிசல்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் பிரதான உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஏ,எல்,எம்,அதாஉல்லா தெரிவித்ததாவது:

இறைவனின் படைப்புக்கள் அனைத்திலும் கலையம்சங்கள் இழையோடி உள்ளன.கலையிலிருந்து இறைவனைப் பிரிக்க முடியாது.சோளங்கதிரின் மீசை எனப்படும்,தும்புபோலவுள்ள அந்தப்படைப்பை அவதானியுங்கள்.

அதை நாம் உண்பதில்லை. ஆனால், அதில் பல மருத்துவ குணங்களை இறைவன் உண்டாக்கியுள்ளான். கலை என்பது உணர்வோடு ஒன்றித்துள்ளஅற்புத ஆற்றல். அறிவிலிருந்து கலையை எவ்வகையிலும் பிரிக்க முடியாது. அஸ்ஸிராஜ் ஜூனிய கல்லூரி மாணவர்களால் இங்கு மேடையேற்றப்பட்ட



நிகழ்வுகள் சகலதிலும் அற்புத ஆற்றல்கள் வெளிப்பட்டிருந்தன. ஒரு பாடசா லையின் வளர்ச்சி பிரதானமாக அதிபரின் அர்ப்பணிப்பில் தங்கியுள்ளது.

இந்த வகையில் இப்பாடசாலையின் அதிபர் ரினோஸின் அர்ப்பணிப்புக்களை இம்மாணவர்களின் திறமைகளில் காண முடிந்தது.பாடசாலையின் அமைவிடத்தை தீர்மானிப்பதிலும் கட்டடங்களை வடிவமைப்பதிலும் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.சிறந்த சூழலில் அமையும் பாடசாலைகளில்தான் மாணவர்கள் உள ஆரோக்கியத்தோடு கற்க முடியும்.

அரசியல் அதிகாரங்களை ஆண்டவன் எங்களிடம் தந்திருந்த காலத்தில் கல்வித்துறையில் நாங்கள் கூடிய கவனம் செலுத்தினோம். பிரதிக் கல்வியமைச்சராக இருந்த காலத்தில் எமது பிரதேச பாடசாலைகளின் வளர்ச்சியையே பிரதானமாகக் கருதியதாகவும் அதாஉல்லா எம்,பி,தெரிவித்தார்.

# ஹூதா ஜும்ஆ பள்ளிவாசலில் சிரமதானப் பணிகள் முன்னெடுப்பு



(கல்முனை மத்திய தினகரன்,பெரிய நீலாவணை விசேட நிருபர்கள்)



"சுத்தமான சூழலை நோக்கி" எனும் தொனிப்பொருளிலாள மாபெரும் சிரமதான பணி கல்முனை ஹூதா ஜும்ஆ பள்ளிவாசல் வளாகத்தில் சனிக்கிழமை (17) இடம்பெற்றது.ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனின் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்வு, ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனின் ஸ்தாபக தலைவி சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீன் தலைமையில் இடம்பெற்றது. இச்சிரமதான பணியில் அமைப்பின் முகாமையாளர் டாக்டர் எஸ்.நளிமுதீன் ஆகியோருடன் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு ச்சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். கல்முனை மாநகர சபை சுகாதர பிரிவினர், கல்முனை ஹுதா ஜும்மா பள்ளிவாசல் தலைவர் உட்பட்ட நிர்வாகத்தினர் மற்றும் தஃவா குழு உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இச்சிரமதான பணியில் கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மீனவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். கல்முனைப் பிரதேசத்தில் உள்ள பொது இடங்களை சுத்தமுள்ள சுகாதாரமிக்க இடமாக மாற்றுவதற்கான முயற்சியில் ஏ.ஆர் மன்சூர் பவுண்டேஷன் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத் தகத்தக்கது.

# கல்விச் சேவையாளர்களை கௌரவிக்கும் விசேட நிகழ்வு

(பாலமுனை தினகரன் நிருபர்)



அட்டாளைச்சேனை நலன் புரி அமைப்பு ஏற்பாடு செய்த கல்வி விருது விழா அண்மையில் (17) லொய்ட்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் புதிய அதிபர்களாக நியமிக்கப்பட்டவர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அதிபர்களை கௌரவிக்கும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.அமைப்பின் தலைவர் எம்.ஜே.எம்.அன்வர் நௌஷாத் தலைமையில் நடைபற்ற இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், பைசல் ஹாசிம் முன்னாள் மாகாண அமைச்சர் எம் எஸ் உதுமாலெப்பை. கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ் எம் சபீஸ்.அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ கே அமீர். முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை அமைப்பாளர் ஏ.எல்.அலியார் . முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்

# வீடுகள் கையளிப்பு

( காரைதீவு குறூப் நிருபர் )

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருக்கோவில் பிரதேசத்தில் வீடுகளை கையளித்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சினால் பாதிக்கபட்ட மக்களுக்காக 2023ம் தெரிவுசெய்யப்பட்ட 26 பயனாளிகளுக்கு ரூபா 6 இலட்சம் மற்றும் 10 இலட்சம் பெறுமதியான வீடுகள் வழங்கபட்டன. இதன் முதற்கட்டமாக மூன்று வீடுகள் கடந்த புதன்கிழமை பிரதேச செயலாளர்.த.கஜேந்திரன் தலைமையில் உரிய பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில்,கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான டி. வீரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தீகவாப்பி வைத்தியசாலைக்கு அதிகாரிகள் கள விஜயம்

(எம்.எம்.ஜெஸ்மின்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அழைப்பிற்கு இணங்க, தீகவாப்பி பிரதேச வைத்தியசாலைக்கு கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.இவ்விஜயத்தில்,தேசிய திட்டமிடல் திணைக்களம், திறைசேரி மற்றும் PSSP செயற்றிட்ட அதிகாரிகள் இணைந்திருந்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டல், ஆலோசனையில் இவ்விஜயம் அமைந்திருந்தது.மேலும், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் .எம் சீ எம் மாஹிர், பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி மற்றும் வைத்திய சாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

## ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

### வெள்ளி 2024.02.16

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | திகதி | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிக விபரம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5392 | | T | 4 6 2 5 5 6 | | ரூ. 39,828,136.00 |
| கொவிசெத | 3634 | 2024.02.16 | W | 27 33 66 67 | விசேட எழுத்து W; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 48476 | ரூ. 66,665,085.52 |
| Mega Power | 1740 | 2024.02.16 | N | சுப்பர் இலக்கம் 12; 16 21 58 62 | 02808; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | ரூ. 424,237,414.00 |
| Lucky 7 VIP | 0218 | 2024.02.16 | S | 4 7 4 1 5 4 | L7 எழுத்து S | ரூ. 25,420,062.00 |
| ராசி சுப பலன் | 701 | 2024.02.16 | கன்னி | 10 26 38 56 | 54300; 28 | ரூ. 4,343,235.60 |
| தன நிதானய | 1422 | 2024.02.16 | S | 29 55 64 73 | விசேட எழுத்து S; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 23113 | ரூ. 136,345,368.00 |

### சனி 2024.02.17

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | திகதி | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிக விபரம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5393 | | Z | 7 4 1 9 0 3 | | ரூ. 40,044,576.00 |
| கொவிசெத | 3635 | 2024.02.17 | P | 28 40 56 64 | விசேட எழுத்து P; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 10279 | ரூ. 66,809,231.12 |
| Mega Power | 1741 | 2024.02.17 | F | சுப்பர் இலக்கம் 20; 20 44 60 63 | 47254; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | ரூ. 424,346,302.00 |
| Lucky 7 VIP | 0219 | 2024.02.17 | Q | 4 8 8 7 2 9 | L7 எழுத்து Q | ரூ. 25,420,062.00 |
| ராசி சுப பலன் | 702 | 2024.02.17 | மீனம் | 27 40 56 59 | தனயோக இலக்கம் 12253; நாளுக்கான விதி எண் 24 | ரூ. 4,465,382.00 |
| தன நிதானய | 1423 | 2024.02.17 | Z | 14 21 52 61 | விசேட எழுத்து Z; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 44736 | ரூ. 136,618,526.40 |

# நகர்வலம்



# இலங்கையின் தரம் வாய்ந்த தேசிய அரிசியை பெல்ஜியம் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யுங்கள்

## விலை கொடுத்து வாங்க நாம் தயாராக இருக்கிறோம் -பெல்ஜியம் நாட்டு பிரஜைகள் தெரிவிப்பு





**திறப்பனை தினகரன் நிருபர்**

இலங்கையின் தரம் வாய்ந்த கூடுதலான சுவை கொண்ட தேசிய அரிசியை பெல்ஜியம் நாட்டுக்கு ஏற்றுமதி செய்வீர்களாயின் அவற்றை நாம் விலை கொடுத்து வாங்குவதற்கு தயாராக இருக்கிறோம் என்று பெல்ஜியம் நாட்டின் மாட்டின் டி. கீகள் என்பவர் தெரிவித்தார்.

மதவச்சி, வஹமல்கொல்லாவ பகுதியைச் சேர்ந்த ஹேம பால ஹெட்டியாராச்சி என்ற ஆயுர்வேத வைத்தியரின் தேசிய நெல் உற்பத்தியை பார்வையிடுவதற்காக அண்மையில் அங்கு விஜயம் செய்த பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஹேமபால ஆயுர்வேத வைத்தியருடன் சேர்ந்து அருவி வெட்டும் கத்தியை கொண்டு வேளாண்மை பயிர்களை வெட்டுபவர்களுடன் சேர்ந்து கொண்டனர். இச்சந்தர்ப்பத்தில் கீகள் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நாட்டில் நஞ்சு, விஷம் கலந்த உணவுப் பொருட்களால் குழந்தைகள் நோய் வாய்ப்படுகின்றனர். ஆனால் அதற்கு மாற்றமாக இலங்கையின் தேசிய உற்பத்தியான அரிசி குணம் வாய்ந்தது, சுவையால் அதிகமானது. எமது நாட்டுக்கு இலங்கை அரிசியை ஏற்றுமதி செய்வீர்களாயின் நாம் அந்த அரிசியை விலை கொடுத்து வாங்குவதற்கு தயாராக இருக்கிறோம். உங்கள் அரிசியை முழு உலகுக்கும் வழங்க முடியும்.

நாட்டின் ஆட்சியாளர்கள் அது சம்பந்தமாக கவனம் எடுப்பார்களாயின் நல்ல வருவாய் ஒன்றை நாட்டுக்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும். ஹேமபால வைத்தியரிடம் 12 வகையான நெல் வகைகள் உண்டு என கூறினார்.

இது சம்பந்தமாக வைத்தியர் ஹேமபால ஹெட்டி ஆராய்ச்சி குறிப்பிடும் போது, நாம் இம்முறை 12 வகையான நெல்லை உற்பத்தி செய்துள்ளோம். எமது நாட்டில் சுமார் 250 க்கும் மேற்பட்ட நெல் இனங்கள் காணப்படுகின்றன. அன்று அரசர்களுக்கு என்று அவர்களின் உணவுக்காக "குறுளுதுட" என்று சொல்லும் நெல் வகையை உற்பத்தி செய்தார்கள். அத்துடன் பல வர்க்கம் கொண்ட நெல் வகைகள் அன்று உற்பத்தி செய்யப்பட்டு உணவுக்காக பெற்றுக் கொள்ளப்பட்டன. அதனால் அன்றைய மக்கள் நோயற்றவர்களாக இருந்தார்கள்.

மருந்து ஹீனெட்டி, சுவதெல், கறுப்பு ஹீனட்டி, முத்துமாலை, எச் ஹத்தர போன்ற பாரம்பரிய தேசிய நெல் வர்க்கம் அப்போது இருந்தது இப்போது விவசாய அமைச்சு முன் வந்து இவற்றை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு திட்டமிட்டால் நாட்டுக்கு "டொலரை" கொண்டு வர முடியும் என்றார்.

# கொழும்பில் இரத்ததான முகாம்



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

இலங்கையின் 76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு *ISRC Sri Lanka, HRC Sri Lanka ,YMMA Central (Colombo district), AUMSA, Ramya lanka* இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாமொன்று (15) கொழும்பில் இடம் பெற்றது.

"உயிரை காக்கும் உதிர தானம் ஒவ்வொரு தேவையின் பொழுதுகளிலும் உதவிடுவோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்பு ஜே.ஆர்.ஜெயவர்தன நிலையத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இடம்பெற்ற இந்த இரத்ததான நிகழ்வுல் 50ற்கும் மேற்பட்டோர் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தமது இரத்தத்தை தானம் செய்தனர்.

தேசிய குருதி மாற்று பிரயோக சேவை கொழும்பு பிரதான அலுவலகத்தின் வைத்தியர்கள் , தாதியர்கள் குழாம் கொழும்பு ஜே.ஆர். ஜெயவர்தன நிலையத்திற்கு வருகை தந்து இரத்தத்தை சேகரித்தனர்.





கவியாயினி எனும் புனைப்பெயர் கொண்ட இரத்தினபுரி வேவல்வத்தை தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியை வீ. வித்தியாயினி எழுதிய 'மௌனமொழி' எனும் கவிதை நூலின் முதல் பிரதியை தமிழகத்தின் அயலகத் தமிழர் நலன்துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ் மஸ்தானுக்கு கையளித்தார். மலையக முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ் சிவலிங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வு அண்மையில் சென்னையில் இடம்பெற்றது.

# மீள் திருத்த பரீட்சை முடிவு



ஜீலான் மத்திய நவோதய கல்லூரி மாணவி பாத்திமா நஜ்லா மனால் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மீள் திருத்த பரீட்சை முடிவுகளின்படி 148 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் பைரூஸ், துஜானா தம்பதிகளின் புதல்வியாவார்.



2024 ஆம் ஆண்டுக்கான புதிய ஹஜ் கமிட்டி சமய கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது. இப்றாஹீம் அன்ஸார் தலைமையில் நியமனம் பெற்றுள்ள உறுப்பினர்கள் சமய விவகார கலாசார அமைச்சர் ரத்னசிரி விக்கிரமநாயக்கவுடன் எடுத்துக்கொண்ட படம். உறுப்பினர்கள் (இடமிருந்து வலமாக) ; மில்பர் கபூர், நிப்ராஸ் நஸீர், இபாஸ் நபுஹான், மொஹமட் ஹனீபா இஷாக், மற்றும் முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் இஸட். ஏ.எம். பைசாலும் காணப்படுகிறார்.
(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# கணவனின் தாக்குதலில் மனைவி உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கணவனுடைய தாக்குதலில் படுகாயமடைந்த மனைவியொருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை பொலிஸ் பிரிவின் கெலே திறப்பனை, இஹலகம பகுதியிலுள்ள வீடொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். கெலே ரம்பாவ, இஹலகம பகுதியை வசிப்பிடமாக கொண்ட 23 வயதுடைய நிமேஷா எனப்படும் இளம் யுவதி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குடும்ப தகராறு காரணமாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையின் போது கூரிய ஆயுதமொன்றினால் தாக்கியதில் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய 32 வயதுடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# ஜம்இய்யதுல் உலமா குருநாகல் மாவட்ட கிளை புதிய உறுப்பினர்கள்

**புத்தளம் தினகரன் நிருபர்**

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா குருநாகல் மாவட்டக் கிளை மற்றும் 20 பிராந்திய கிளைகளுக்குமான நிர்வாகத் தெரிவு அண்மையில் உலமா சபையின் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது.

21 அங்கத்தவர்களை கொண்ட நிறைவேற்று குழு உறுப்பினர்களை தேர்வு செய்வதற்காக நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பு மூலம் பின்வருவோர் புதிய உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக மீண்டும் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். சுஐப் (தீனி), செயலாளர் அஷ்ஷெய்க் எஸ்.ஐ. எம். ஹபீழ் (ரொழி), பொருளாளர் அஷ்ஷெய்க் கே. எம். நௌபர் (மனாரி), உப தலைவர்கள் அஷ்ஷெய்க் எச். எம் .எம். சித்தீக் (காசிமி), முஹம்மது தையிப் (முப்தி), உப செயலாளர் அஷ்ஷெய்க் மபாஹிம் (அஹ்ஸனி). ஏனைய நிர்வாக உறுப்பினர்கள்:

அஷ்ஷெய்களான எம். எப். எம். நளீம்(தீனி), எம்.நளீம்தீன் (தீனி), யூ. எல்.எம். நிஃமதுல்லாஹ் (நூரி), எம்.எஸ்.எம்.பளீல் (பத்தாஹி) எம். ரிழா (ஹுசைனி), எம்.ன்.எம். மாஹிர் (ரஹ்மானி), எம்.எம். நௌஷாத் (ரஹ்மானி) எம். இல்யாஸ் (அஸ்ஹரி) எம். ஸரூக் (கியாஸி) ஏ .எம் .ரிஸ்மி (காசிமி) ஏ. ஆர் .எம். அப்துல் சத்தார் (தீனி) ஏ. ஆர். எம். அப்துல் ஹலீம் (இஹ்ஸானி) ஏ.எஸ்.எம். ஷாம் மௌலானா(மனாரி) எஸ் .எம். ஹாஜா முஹியித்தீன் (தீனி) ஏ.எல். ஜஃபர்தீன் (இஹ்ஸானி) ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

# 2023ஆம் ஆண்டில்; 470 காட்டு யானைகள் உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கடந்த ஆண்டு (2023 ல்) 470 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன் அவற்றில் 200 யானைகள் மனித செயற்பாடுகளினால் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டினால் 83 காட்டு யானைகளும் , மின்சாரம் தாக்கி 66 யானைகளும் ,யானை வெடிகளினால் 47 யானைகளும் உடம்பில் நஞ்சேற்றம் ஏற்பட்டதனால் 04 யானைகளும் உயிரிழந்துள்ளன.

இயற்கை அனர்த்தங்கள் அல்லது விபத்து உடல் நலக்குறைவுகளினால் 70 காட்டு யானைகளும் ரயிலுடன் மோதி 23 யானைகளும் உயிரிழந்துள்ளன.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் அதிகளவான காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன் ரயிலில் மோதி 11 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்தது.



பேருவளை சீனன்கோட்டை இக்ரா தொழில் பயிற்சி கல்லூரிக்கு 'SOLAR POWER PROJECT' சூரிய சக்தி மின் இணைப்பை பெற்றுத்தருமாறு கோரி கல்லூரியின் பழைய மாணவர்கள், விரிவுரையாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலை நளீமிய்யா கலாபீட நாற்பெரும் விழாவில் சந்தித்து கோரிக்கை கடிதத்தை கையளித்தபோது எடுத்த படம்.




கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியகளம் தொடர் 414 ஆவது நிகழ்வு கடந்த 5ஆம் திகதி மாலை சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கல்விக் குழு செயலாளர் த. இராஜ ரட்ணம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சென்னை கிறிஸ்தவ கல்லூரி தமிழ் துறைத்தலைவரும் முன்னாள் கலைப்புல முதன்மையருமான மோசசு மைக்கேல் பாரடே "சித்தர் கூறும் செய்தி" எனும் தலைப்பில் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம்.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவிகள்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதார உதவிக்காக வேண்டி முட்டைக் கோழிகளை வழங்குவதற்கு உலக உணவுத்திட்டத்தின் மாவட்ட அலுவலகம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியாக குறைந்த வருமானம் பெறும் குடும்ப உறுப்பினர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு அவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன. உலக உணவுத்திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு முட்டைக் கோழி வளர்ப்பு மற்றும் வீட்டுத்தோட்டம் உள்ளிட்ட விடயங்களுக்கு பல உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலமே முட்டைக்கோழி வளர்ப்பிற்கு உதவிகள் வழங்கப்படவுள்ளதுடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என அநுராதபுரம் மாவட்ட உலக உணவுத்திட்ட அலுவலகத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# 35 வருடகால ஆசிரிய சேவையிலிருந்து அதிபர் ஏ.எம். நஜூப்தீன் ஓய்வு

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் ஏத்தாளை அரசினர் ரோமன் கத்தோலிக்க கலவன் தமிழ் பாடசாலையின் அதிபர் ஏ.எம். நஜுப்தீன் அவர்கள் 35 வருடகால ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையொட்டி பிரியாவிடை நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

நஜுப்தீன் ஆசிரியர் சுமார் 15 வருடகாலமாக இரு மொழி பாடசாலையாகிய இப்பாடசாலையின் அதிபராக சேவை செய்த நிலையில் கடந்த (06/02/2024) அன்று ஓய்வு பெற்று செல்கிறார்.

இவருக்கான பிரியாவிடை நிகழ்வில் புத்தளம் வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எச். எம். அர்ஜுன, கல்பிட்டி கோட்ட கல்வி பணிப்பாளர் என்.எம். ஆர். டி. பெர்னாண்டோ, புத்தளம் வடக்கு கோட்ட கல்வி பணிப்பாளர் ஏ.அஸ்கா, வலய கல்வி ஆசிரியர் பிரிவு பொறுப்பாளர் காந்தி லதா, பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் மற்றும் மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# வடக்கின் உதயம்

## யாழ்ப்பணம்; ஏழு ஆலயங்களில் வழிபாட்டுக்கு இராணுவம் அனுமதி

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள 21 ஆலயங்களில் 07 ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்த இராணுவத்தினர் கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கியுள்ளனர்.

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் உள்ளிட்ட 07 ஆலயங்களுக்கு சென்று வழிபடவே இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

ஆலய வழிபாடுகளுக்கு செல்ல விரும்புவோர், தமது பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்குமாறும் , நிர்வாகத்தினர் விபரங்களை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றில் கையளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை இராணுவத்தினரே மேற்கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## செட்டிகுளத்தில் 650 ஏக்கர் வயல் காணியை 650 குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை

### மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் திலீபன் எம்.பி

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் 650 ஏக்கர் வயல் காணியினை 650 குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (18) இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அருவித்தோட்டம் பகுதியில் பல நூறு ஏக்கர் காணிகளை விடுவித்துக் கொடுக்கப்பட்டிருந்தும் அதனை 15 பேர் மாத்திரமே செய்து வருகின்றனர். இவ் வயல் காணிகளை மீளப்பெற்று தலா ஒரு ஏக்கர் வீதம் காணியற்ற 650 குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இதனால் பல குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்திற்காக நெற்செய்கையில் ஈடுபட முடியும்.



இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் அரச அதிபர், பிரதேச செயலாளர், கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தியுள்ளேன். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் மேலும் தெரிவித்தார்.

## காணாமல்போன உறவுகளின் 07ஆம் ஆண்டு நிறைவு தினம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நாளை (20) செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் அடையாள பேரணியொன்று நடைபெறவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள மேற்படி பேரணியானது செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பித்து கிளிநொச்சி டிப்போ சந்தியில் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒட்டுசுட்டானில் மனைப்பொருளியல் கண்காட்சியும் கௌரவிப்பும்

**மாங்குளம் குருப் நிருபர்**



ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி கிளையின் ஏற்பாட்டில், வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மகளிர் நிலையத்தின் மனைப் பொருளியலும் கைவேலைக்குமான கண்காட்சி நிகழ்வும் கற்கைநெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் கூழாமுறிப்பு பொது நோக்கு மண்டபத்தில் மிகவும் சிறப்பான நடைபெற்றது.

பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன் பிரதம விருந்தினராகவும், வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகள், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக நிர்வாக உத்தியோதர் கு. திருக்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. உமாபாலன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

தையல் மற்றும் கைவினைப் பொருட்கள் பயிற்சியினை நிறைவு செய்த பெண்களின் தையல் மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. மிகவும் அழகான முறையில் வடிவமைக்கப்பட்ட பொருட்களை பார்வையாளர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டதோடு அதனை கொள்வனவும் செய்தனர்.

இறுதியாக பயிற்சியினை நிறைவு செய்த பெண்களுக்கான கௌரவமும் அவர்களுக்கான பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.





விவசாயிகளின் பயிர்ச்செய்கைக்கு சேதம் விளைவிக்கும் விலங்குகளிடமிருந்து விவசாயச் செய்கையை பாதுகாக்கும் நோக்கில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் முயற்சியினால் விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் விவசாய பயிர் பாதுகாப்பு துப்பாக்கிகள் (17) வவுனியா மாவட்டச் செயலகத்தில் வைத்து சுமார் 125 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

## யாழில் சுமார் 250 போதைப்பொருள் வழக்குகள் பதிவு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் சுமார் 250 போதைப்பொருள் வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் முதல் இந்த மாதம் வரையிலான காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் போதைப்பொருளுக்கு எதிராக பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளில், போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தமை, கடத்திச் சென்றமை, விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் 250 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொடிகாமத்தில் விபத்து; இருவர் படுகாயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் படை முகாமை அண்மித்துள்ள பகுதியில் (17) சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். லொறியொன்றை வீதியோரம் நிறுத்தி வைத்து விட்டு வீதியில் நின்ற சாரதியை மோட்டார் சைக்கிள் மோதியதில் லொறிச் சாரதி கால் முறிவடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதன வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளைஞனும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இந்திய வீடமைப்புத் திட்டத்தில் இந்து குருமார்களும் உள்வாங்கப்பட வேண்டும்

### அகில இலங்கை ஐக்கிய இந்து குருமார்கள் சங்கம் கோரிக்கை

**ஹட்டன் விசேட நிருபர்**

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படவிருக்கின்ற 10,000 வீடமைப்புத் திட்டத்தில் மலையக இந்து குருமார்களுக்கும் நாட்டில் வீடில்லாத குருமார்களுக்கும் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை ஐக்கிய இந்து குருமார்கள் சங்கத்தின் ஸ்தாபகர் சிவஸ்ரீ எஸ். ஸ்கந்தராஜா குருக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

அகில இலங்கை ஐக்கிய இந்து குருமார்கள் சங்கத்தின் பொதுக் கூட்டம் நேற்று (18) கொட்டகலை முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், மலையக பகுதியில் வாழும் பெரும்பாலான குருமார்களுக்கு வீடுகள் இல்லை. தோட்டங்களில் சிறிய அறையில் தான் அவர்களின் குடும்பமே வாழ்கிறது. இவ்வாறு வாழ்ந்து வரும் குருமார்கள் இறந்தால் கூட அவர்களின் குடும்பம் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலை தான் காணப்படுகின்றது. இந்த நாட்டில் ஏனைய சமயத்தலைவர்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் சலுகைகள் இந்து குருமார்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. குறைந்த ஊதியத்தை பெறும் இவர்களால் தனக்கென ஒரு வீடு நிர்மாணித்துக்கொள்ளவும் முடியாது. அதற்கானகாணிவசதியோ பொருளாதாரமோ பெரும்பாலான குருமார்களிடம் இன்று இல்லை.

ஆகவே, இந்திய வீடமைப்பு திட்டத்தில் 1000 வீடுகளையாவது வீடுகள் இல்லாத குருமார்களுக்கு பெற்றுக்கொடுக்க அரசாங்கமும் அரசியல் தலைவர்களும் முன்வர வேண்டும். அதே நேரம் கொட்டகலை பகுதியில் ஸ்ரீ வித்யா என்ற சைவ பாடசாலையினை ஆரம்பித்து சமயம், வேதம், தேவார திருமுறைகள், ஜோதிடம் உள்ளிட்ட விடயங்களை குருமார்களுக்கு இலவசமாக கற்பித்து வருகிறோம். இதற்கான அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை.

இந்நிலையில் இந்த பாடசாலையினை உருவாக்குவதற்குரிய நடவடிக்கையினையும் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். கடந்த காலங்களில் நாங்கள் சமய பணிகள் மாத்திரம் அல்லாது பல சமூக பணிகளையும் முன்னெடுத்துள்ளோம். தற்போது இந்த சங்கம் உருவாக்கப்பட்டு 10 வருட நிறைவினை எட்டியுள்ளது.



ஆகவே, இதில் குருமார்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்த கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு அதனை அரசாங்கத்திற்கும் அமைச்சர்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அறிவிக்க உள்ளோம் என்றார்.

இன்று தோட்டத்தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக பேசப்பட்டு வருகிறது. இன்றைய சூழ்நிலையில் குடும்பம் ஒன்றுக்கு நாளொன்றுக்கு சாப்பிடுவதற்கு 3000 ரூபாவாவது தேவைப்படும் நிலை உள்ளது. ஆகவே தோட்டத் தொழிலாளர்களின்சம்பளம்குறைந்த பட்சம் அடிப்படை சம்பளமாக 2000 ரூபாவாவது பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# மலைச்சாரல்

## நுவரெலியாவில் 1 கிலோ கரட் விலை 360 ரூபாவாக குறைவு

**தலவாக்கலை குறூப் நிருபர்**



நுவரெலியாவில் 2000 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கரட்டின் விலை நேற்று (18) 360 ரூபாவாக குறைந்துள்ளது.

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கரட்டின் மொத்த விலை 360 ரூபாவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதுடன், மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் இன்னும் வழமைக்கு திரும்பாத காரணத்தினால் சந்தையில் கெரட்டின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கரட் உற்பத்தி சந்தையில் அதிகமாக காணப்பட்டதன் காரணமாக கரட்டின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. நுவரெலியா மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் நிலவும் சிறந்த காலநிலை காரணமாக மலையகத்தில் மரக்கறி உற்பத்தி முன்பை போன்று நன்கு கிடைப்பதாகவும், ஏறக்குறைய அனைத்து மலையக மரக்கறி வகைகளின் விலைகளும் குறைந்துள்ளதாகவும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## மஸ்கெலியா பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் கரப்பந்தாட்ட போட்டி

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



நீதி" செயற்பாட்டுடன் இணைந்து ஆரோக்கியமான இளைஞர் சமூகத்தை விளையாட்டிற்கு வழிநடத்தும் நோக்கில் மஸ்கெலியா, நல்லதண்ணிய மற்றும் நோர்வூட் பொலிஸ் எல்லைக்குட்பட்ட இளைஞர்கள் பங்குபற்றிய கரப்பந்தாட்டப் போட்டி மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தில் (18) நடைபெற்றது.

மஸ்கெலியா பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் போட்டியானது ஹட்டன் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகம தலைமையில் இடம்பெற்றது.

மஸ்கெலியா, நல்லதண்ணி மற்றும் நோர்வூட் ஆகிய பொலிஸ் எல்லைகளுக்குட்பட்ட 28 பலம் வாய்ந்த கரப்பந்தாட்ட அணிகள் இங்கு போட்டியிட்டன.



தமிழ்நாடு விருதுநகர் ரோட்டரி மாவட்டம் 3212 கிளப் அனுசரணையில் முனைவர் ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணனின் தன்னம்பிக்கையூட்டும் "யாதுமானவள்" நிகழ்வு இலங்கையில் 14 நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் கலந்துகொள்ள அவர் நேற்று (18) நண்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். அவர்களை "அரோ அறக்கட்டளை அமைப்பின்" (ARROW CHARTY ORGANIZATION KANDY SRILANKA,) தலைவி திருமதி பிரியா கார்த்திக், மலையக மகளிர் மன்ற செயலாளர் கீதா ராமராஜ் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்றபோது...

## நானுஓயாவில் மரம் ஏற்றி வந்த லொறி விபத்து; ஒருவர் பலி



நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா டெஸ்போட் மேற்பிரிவு காட்டுப்பகுதியில் இருந்து வெட்டிய மரங்களை ஏற்றிச்சென்ற லொறியொன்று நேற்று (18) சுமார் 200 அடி பள்ளத்தில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதில், ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்தில் வீதியில் நின்றுகொண்டிருந்த ஒருவர் குறித்த லொறியில் நானுஓயா பிரதான நகருக்கு செல்வதற்காக ஏறி வந்தபோதே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் 58 வயதுடைய நானுஓயா டெஸ்போட் தோட்டம் வாழைமலை பிரதேசத்தைச் சேர்ந்த வடமலை மயில்வாகனம் என்பவரே ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். விபத்திற்குள்ளான லொறியின் சாரதி ஆபத்தான நிலையிலும், உதவியாளர் சிறு காயங்களுடனும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக லொறி வீதியில் இருந்து விலகி, விபத்துக்குள்ளாகி உள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# எடிசன் திரை விருதுகளில்

## 2023 ஆம் ஆண்டின் சிறந்த நடிகர் யார்?





16 ஆவது ஆண்டு எடிசன் திரை விருது நிகழ்வு எதிர்வரும் மார்ச் மாதம் சென்னையில் நடைபெற உள்ளது. அந்நிகழ்விற்கான தேர்வுப் பட்டியல் கடந்த ஆண்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் திரைப்படங்களில்

**சிறந்த நடிகர் தேர்வுப் பட்டியலில் மாஸ் ஹீரோ வரிசையில்**

**ரஜினிகாந்த், விஜய், அஜித், விஷால்**

ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

**சிறந்த நடிகருக்கான தேர்வுப் பட்டியல் வரிசையில்**

**விக்ரம், தனுஷ், சிவகார்த்திகேயன், கார்த்தி, சிம்பு, ஜெயம் ரவி, ராகவா லோரன்ஸ், சித்தார்த்**

போன்றவர்களும் இடம் பெற்றுள்ளனர். மேலும் உலகத்தமிழர்கள் தங்களுக்கு பிடித்தமான நடிகர்களை தேர்ந்தெடுக்க வசதியாக எடிசன் அவார்ட்ஸ் செயலியில் மற்றும் www.edisonawards.in என்ற வலைதளம் மூலமாகவும் வாக்குகளை செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்கள் அறியும் வகையில் தினசரி நாளேடு பண்பலை சமூக ஊடகங்கள் மூலமாகவும் விளம்பரம் செய்யப்பட்டு வாக்குகளை பெற்று வருவதாக எடிசன் விருது குழுத் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார். மேலும், தமிழ் ரசிகர்கள் தாங்கள் வாக்களித்த நடிகர், நடிகைகளை எடிசன் விருதில் ரெட் கார்பெட்டில் நடக்கும் நிகழ்வுகளை உலகத் தமிழர்கள் அறியும் விதத்தில் பல்வேறு நாடுகளில் உள்ள சமூக ஊடகங்கள் IPTVகள் மூலமாக காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் விபரங்களுக்கு +6016 6167708 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



சர்வதேச அச்சு ஊடக அனுசரணை / Global Print Media Partner:

தினகரன் THINAKARAN · தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# இயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தினால் உலகில் யுத்தமே இடம்பெறப் போவதில்லை!

### இரா.துரைரத்தினம் எழுதிய 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' நூல் அறிமுகவிழாவில் உரை





**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**கொழும்பு -02.**

---

**For classified advertisements and for replies**

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

---

## பகிரங்க அறிவித்தல்

### எரோடைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**(C0. Reg.No. PV 101249)**

2007 இல. 07 கம்பனிகள் சட்டத்தின் ('சட்டம்') 242(1) பிரிவின் பிரகாரம் எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனி (கம்பனி பதிவு இல. பிவி 101249) எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனி (கம்பனி பதிவு இல. பிவி 10968) உடன் மேற்கொள்ளப்படும் உத்தேச ஒன்றிணைத்தல் சம்பந்தமாக மேற்படி சட்டத்தின் 242(3) (பீ) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் பகிரங்க அறிவித்தல்.

2024 பெப்ரவரி 12ம் திகதி எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியின் பணிப்பாளர் சபை மற்றும் எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியின் பணிப்பாளர் சபையுடன் இணைந்து எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியுடன் கம்பனிகள் சட்டத்தின் 242(1) பிரிவின் பிரகாரம் ஒன்றிணைக்கப்படுவதற்கும் அந்த ஒன்றிணைக்கப்பட்ட கம்பனி எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் என்ற பெயரில் தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்கு சபையில் அனுமதி நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியின் செயற்பாடுகள் அதன் பிரகாரம் முடிவுறுத்தப்படுகின்றது.

இந்த அறிவித்தல் பிரசுரமாகி இருபது நாட்களுக்கு குறையாத அலுவலக நாள் காலத்தின் பின்னரான தினத்தில் குறித்த கம்பனிகள் சட்டத்தின் 243ம் பிரிவில் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் குறித்த ஒன்றிணைப்பு பிரேரணை பதிவு செய்வதற்காக கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் மற்றும் எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியினால் கோரப்படுவதற்கு அனுசரணையாக குறித்த சட்டத்தின் 244(2) பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் குறித்த ஒன்றிணைப்பு சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட தினம் முதல் குறித்த ஒன்றிணைப்பு உரிமை அமுலாகும்.

எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் மற்றும் எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் சபை அனுமதி பெற்ற ஒன்றிணைத்தல் பிரேரணைக்கு ஆதரவு என கருதுவது சட்டத்தின் 242(4) பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஒன்றிணைத்தல் பிரேரணையின் பிரதிகளை எந்த கம்பனிகள் பங்குதாரர்கள் அல்லது கடன் பெற்றவர் அல்லது கம்பனியுடன் தொடர்பு உள்ள எவரிற்கும் குறித்த கம்பனியின் பதிவு அலுவலகமான இல. 222ஏ, கிம்புலாப் பிட்டிய வீதி, நீர்கொழும்பு என்ற முகவரியில் கம்பனியின் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் நேரத்தில் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் கம்பனி பங்குதாரர் அல்லது கடன் பெற்றவர் அல்லது கம்பனியினால் ஏதேனும் தொடர்பு உள்ள எவருக்கும் கம்பனிக்கு வேண்டுதல் விடுப்பதன் மூலம் குறித்த ஒன்றிணைப்பு பிரேரணையின் பிரதிகளை இலவசமாக பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**
**எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்,**
**(கையொப்பமிட்டது)**

**AFA கோபரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்.**
**செயலாளர்கள்.**

2024 பெப்ரவரி 14

---

## பகிரங்க அறிவித்தல்

### எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**(Co. Reg. No. PV 10968**

2007 இல. 07 கம்பனிகள் சட்டத்தின் ('சட்டம்') 242(1) பிரிவின் பிரகாரம் எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனி (கம்பனி பதிவு இல. பிவி 101249) எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனி (கம்பனி பதிவு இல. பிவி 10968) உடன் மேற்கொள்ளப்படும் உத்தேச ஒன்றிணைத்தல் சம்பந்தமாக மேற்படி சட்டத்தின் 242(3) (பீ) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் பகிரங்க அறிவித்தல்.

2024 பெப்ரவரி 12ம் திகதி எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியின் பணிப்பாளர் சபை மற்றும் எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியின் பணிப்பாளர் சபையுடன் இணைந்து எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியுடன் கம்பனிகள் சட்டத்தின் 242(1) பிரிவின் பிரகாரம் ஒன்றிணைக்கப்படுவதற்கும் அந்த ஒன்றிணைக்கப்பட்ட கம்பனி எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் என்ற பெயரில் தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்கு சபையில் அனுமதி நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், எரோ டைனமிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் செயற்பாடுகள் அதன் பிரகாரம் முடிவுறுத்தப்படுகின்றது.

இந்த அறிவித்தல் பிரசுரமாகி இருபது நாட்களுக்கு குறையாத அலுவலக நாள் காலத்தின் பின்னரான தினத்தில் குறித்த கம்பனிகள் சட்டத்தின் 243ம் பிரிவில் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் குறித்த ஒன்றிணைப்பு பிரேரணை பதிவு செய்வதற்காக கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் மற்றும் எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியினால் கோரப்படுவதற்கு அனுசரணையாக குறித்த சட்டத்தின் 244(2) பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் குறித்த ஒன்றிணைப்பு சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட தினம் முதல் குறித்த ஒன்றிணைப்பு உரிமை அமுலாகும்.

எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் மற்றும் எரோ டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் சபை அனுமதி பெற்ற ஒன்றிணைத்தல் பிரேரணைக்கு ஆதரவு என கருதுவது சட்டத்தின் 242(4) பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஒன்றிணைத்தல் பிரேரணையின் பிரதிகளை எந்த கம்பனிகள் பங்குதாரர்கள் அல்லது கடன் பெற்றவர் அல்லது கம்பனியுடன் தொடர்பு உள்ள எவரிற்கும் குறித்த கம்பனியின் பதிவு அலுவலகமான இல. 222ஏ, கிம்புலாப் பிட்டிய வீதி, நீர்கொழும்பு என்ற முகவரியில் கம்பனியின் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் நேரத்தில் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் கம்பனி பங்குதாரர் அல்லது கடன் பெற்றவர் அல்லது கம்பனியினால் ஏதேனும் தொடர்பு உள்ள எவருக்கும் கம்பனிக்கு வேண்டுதல் விடுப்பதன் மூலம் குறித்த ஒன்றிணைப்பு பிரேரணையின் பிரதிகளை இலவசமாக பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**
**எக்வா டைனமிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்,**
**(கையொப்பமிட்டது)**

**அன்டன் பெர்னாண்டோ அசோசியேட்ஸ்.**
**செயலாளர்கள்.**

2024 பெப்ரவரி 14

---

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 120,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 பெப்ரவரி 21ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124D249 | LKA18224H231 | LKA36425B219 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 40,000 | 50,000 | 120,000 |

| | | |
|---|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : | 2024 பெப்ரவரி 21 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2024 பெப்ரவரி 26 |
| வழங்கப்படும் திகதி | : | 2024 பெப்ரவரி 23 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2024 பெப்ரவரி 21 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள் |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்படுடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| ஃப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**டபிள்யு.எல்.எஸ். ஜயசுந்தர**
**பதில் பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்காக 60/70 தர Bulk Bitumen 1,200 MT கொள்வனவு செய்தல்**

| விபரம் | இயந்திராலை | எண்ணிக்கை |
|---|---|---|
| 60/70 Grade Bulk Bitumen | All RDA Asphalt Plants | 1,200 MT |

மேற்குறிப்பிடப்பட்ட 60/70 தர Bulk Bitumen கொள்வனவு செய்வதற்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.02.19** ஆம் திகதி முதல் **2024.03.11** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)

| உருப்படி இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | 2024 ஆம் ஆண்டிற்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்காக மாத்தறையிலிருந்து பத்தரமுல்லை வரையான பேருந்து சேவை வழங்குதல் ஒப்பந்த இல : **RDA/DPR/PRO/SE/NCB/ADMA/2024/20** |

மேற்கூறிய பணிகளுக்கு தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ மனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.02.20** ஆம் திகதி முதல் **2024.03.12** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**RDA கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

---

## வத்தளை - மாபோல நகரசபை

### பாதுகாப்புச் சேவை

### விலை மனுக் கோரல்

2024.04.01 முதல் 2025.03.31 வரை வத்தளை - மாபோல நகர சபையின் பாதுகாப்பு விடயங்களுக்காக அரச பாதுகாப்பு அமைச்சின் பதிவு செய்த அனுபவமுள்ள தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென எழுதப்பட்டு இரு பிரதிகளுடன் 2024.03.11 மு.ப. 10.30 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது நிறுவனத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

1. கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் - 2024.02.19 முதல் 2024.03.11 மு.ப. 10.00 வரை வார நாட்களில் (அலுவலக நேரங்களில்)
2. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் - 2024.02.19 முதல் 2024.03.11 மு.ப. 10.30 வரை
3. கேள்விகள் திறத்தல் - 2024.03.11 மு.ப. 10.30 இற்கு

| உருப்படி இலக்கம் | ஒப்பந்த இலக்கம் | உருப்படி பெயர் | கேள்விப் பிணையின் பெறுமதி (மீளளிக்கப்படும்) ரூபா | விண்ணப்பப் படிவக் கட்டணம் மீளளிக்கப்படாத ரூபா |
|---|---|---|---|---|
| 01 | WM/2/5/2/20 | பாதுகாப்பு சேவகைள் பெற்றுக் கொள்ளல் 2024/2025 | 25,000.00 | 5000.00 |

மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டு விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத விலைமனுதாரர்களின் பிணைத் தொகை மீளளிக்கப்படமாட்டாது. அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் வத்தளை - மாபோல நகர சபையின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

விலைமனுக்கள் திறக்கும் வேளையில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் நபர்கள் அல்லது அவர் அதிகாரம் ஒப்படைத்த பிரதிநிதியொருக்கு சமுகமளிக்கலாம். விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பாதுகாப்பு சேவை விலைமனுக்கள்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2024.02.16
**வத்தளை - மாபோல**
**நகரஅலுவலகத்தில்**
**தொ.பே. 0112 932275**

**பீ.ஏ.எஸ்.எஸ். சந்தருவன்,**
**நகர சபையின் செயலாளர் மற்றும் அதிகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**வத்தளை - மாபோல நகர சபை.**

---

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**2024 ஆம் ஆண்டிற்காக சீருடைகளை வழங்கல்**

**B/08/2024**

காற்சட்டை துணிகள் மற்றும் சேட் துணிகளை வழங்குவதற்காக புகழ்வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார்.

2024.03.08 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3000 ரூபாவை (ரூபா 2480.36 + 2.5% SSCL + 18% VAT) செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம் அல்லது **http://ceypetco.gov.lk/public-tenders/** என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம்.

2024.03.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

விலைமனுக்கள் தபாலில் பதிவுத் தபாலுறையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், 011 5455335 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது **supplies@ceypetco.gov.lk** என்ற மின்னஞ்சல் வழியாக பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**

---

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**2024 ஆம் ஆண்டிற்காக சீருடைத்துணிகளை வழங்கல் மற்றும் சீருடைகளை தைத்தல்**

**B/07/2024**

2024 ஆம் ஆண்டிற்காக கட்டுநாயக்க, இரத்மலான மற்றும் மத்தள ஆகிய இடங்களின் விமானசேவைகள் நிகழ்வுகளுக்காக சீருடைத் துணிகளை வழங்கல் மற்றும் சீருடைகளை தைத்தல் ஆகியவற்றிற்காக புகழ்வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார்.

2024.03.08 ஆம் திகதி வரையும் வேலைநாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமான 3000 ரூபாவை (ரூபா 2480.36 + 2.5% SSCL + 18% VAT) செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது **http://ceypetco.gov.lk/public.tenders/.**என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

2024.03.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடியபின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

விலைமனுக்கள் தபாலில் பதிவுத் தபாலுறையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-09,டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், 011 5455335 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது **supplies@ceypetco.gov.lk** என்ற மின்னஞ்சல் வழியாக பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைக்கோரலுக்கான அழைப்பு

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | வெளிச்சுற்று நெடுஞ்சாலையில் கொட்டாவ முதல் கெரவலப்பிட்டிய வரையான பகுதிக்கு பராமரிப்பு வேலைகளுக்கான தொழிலாளர்களை வழங்குதல். கேள்வி இல. RDA/EOM&M/WP/OCH/2023 /53 |

மேற்கூறப்பட்ட பெறுகைக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024.02.19ஆம் திகதி முதல் 2024.03.11ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், RDA பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

# பெறுகை அறிவித்தல்

## ஆயுர்வேத திணைக்களம்

## சுகாதார அமைச்சு

## சுத்திகரிப்புச் சேவை, பச்சையான/ உலர்ந்த/ சமைபத்த உணவு வழங்குவதற்கான

## விலைமனுக் கோரல்

கீழ்க்காணும் கால எல்லைக்கு ஆயுர்வேத திணைக்களத்திற்கு மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள் தேவைப்படும் வழங்கல்கள் மற்றும் சேவைகள் சார்பாக ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் குறித்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்கள் கோரப்படும் வழங்கல் / சேவைகள் மற்றும் நிறுவனங்கள்

(அ) சுத்திகரிப்புச் சேவை வழங்குதல்

| நிறுவனங்கள் | கால எல்லை |
|---|---|
| 1. தலைமையகம், நாவின்ன | 2024.05.01 முதல் 2024.12.31 வரை |
| 2. சுதேச மருத்துவ முறை பற்றிய தேசிய நிறுவனம், நாவின்ன | |
| 3. பண்டாராநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆய்வகம், நாவின்ன | |
| 4. ஆயுர்வேத தேசிய வைத்தியசாலை, பொரளை | |
| 5. கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, யக்கல | |
| 6. சித்த போதனா வைத்தியசாலை, கைதடி | |
| 7. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை, அம்பாறை | |
| 8. சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை | |
| 9. ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை, மதவாச்சி | |
| 10. சித்த போதனா வைத்தியசாலை, கோனேஷபுரி | |
| 11. யூனானி ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய் | |
| 12. ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை, நிந்தவூர் | |
| 13. மைத்திரிபால சேனாநாயக்க ஞாபகார்த்த மரபுரிமை ஆய்வு வைத்தியசாலை, மிஹிந்தலை | |
| 14. ஆய்வு மற்றும் செயற்றிட்ட சேவை தேசிய மருத்துவப் பூங்கா, ஹல்தும்முல்ல | |

(ஆ) பச்சையான/ உலர்ந்த/சமைத்த உணவு வழங்குதல்

| நிறுவனங்கள் | விபரம் | கால எல்லை |
|---|---|---|
| 1. பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆய்வகம், நாவின்ன | பச்சையான/ உலர்ந்த உணவுகள் | 2024.04.01 முதல் 2024.12.31 வரை |
| 2. ஆயுர்வேத தேசிய வைத்தியசாலை - பொரளை | | |
| 3. கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, யக்கல | | 2024.04.01 முதல் 2024.12.31 வரை |
| 4. சித்த போதனா வைத்தியசாலை - கைதடி | | |
| 5. சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை | | |
| 6. ஆயுர்வேத ஆய்வு வைத்தியசாலை, மதவாச்சி | | |
| 7. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர் வேத ஆய்வு வைத்தியசாலை, அம்பாறை | சமைத்த உணவு | |

04. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்
கீழ்க்காணும் ஒரு உணவிற்கு கேள்வி விண்ணப்பமொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்

(i) ஆயுர்வேத திணைக்களத்தின் காசாளரிடம் கீழ்க்காணும் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் ஆயுர்வேத ஆணையாளர் நாயகத்தை அழைத்த எழுத்துமூல வேண்டுதலை வழங்கல் பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

சுத்திகரிப்புச் சேவை வழங்குதல் - ரூ. 12,500.00
பச்சையான/உலர்ந்த/சமைத்த உணவு வழங்குதல் - ரூ. 12,500.00

(ii) dofayurwedasupply@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்த பின்பு கேள்வி விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம். (வழங்கல் பிரிவில் 112847556 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு விடுத்து குறித்த விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்)

(iii) www.promise.lk இணையதளத்தில் பதிவு செய்துள்ள வழங்குநர்களுக்கு அவ் இணையதளத்திலும் கேள்வி ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

05. ஒவ்வொரு நிறுவனங்களினதும் வழங்கல் அல்லது சேவைகளுக்கு வேறு வேறாக கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படுமாறு கேள்விப் பிணையை சமர்ப்பிக்க வேண்டியதுடன் கேள்வி ஆவணங்களை இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்து ஒவ்வொரு பிரதியையும் வேறு வேறு உறைகளில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் வழங்களின் சேவையின் பெயர் மற்றும் குறித்த நிறுவனத்தின் பெயரை கடித உறைகலின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு ஒரு உறையில் 'மூலப்பிரதி' என்றும், அடுத்த உறையில் 'இரண்டாம் பிரதி' என்றும் குறிப்பிட்டு அப்பிரதிகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு 'தலைவர், பெறுகைக் குழு, ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதம கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம்.

06. சகல கேள்வி ஆவணங்களும் 2024 மார்ச் 22 பி.ப. 12.30 இற்கு ஏற்றுக் கொள்ளல் முடிவடைவதுடன் அவை திறக்கப்படுவதால் கேள்விதாரர்களுக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு தமது ஆளடையாளத்தை உறுதி செய்த பின்னர் அவ்வேளையில் சமுகமளிக்கலாம். பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படும் கேள்வி ஆவணங்களும் 2024 மார்ச் 22 பி.ப. 12.30 இற்கு ஏற்றுக் கொள்ளல் முடிவடைவதால் அக் கேள்வி ஆவணங்கள் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதா என விண்ணப்பதாரி உறுதி செய்து கொள்ளல் வேண்டும். பின்னர் கிடைக்கும் கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் என்பதை கவனித்தல் வேண்டும்.

**ஆயுர்வேத ஆணையாளர் நாயகம்,**
**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர்,**
**ஆயுர்வேத திணைக்களம்,**
**பழைய கொட்டாவ வீதி,**
**நாவின்ன, மஹரகம.**

2024.02.19

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

### CONSTRUCTION OF 40.0M GEOBAG GROYNE AT WHISKY POINT, POTTUVIL IN AMPARA DISTRICT (CONTRACT No.: CCD/CD/2024/02)

1. கீழே விபரிக்கப்பட்டவாறு அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், விஸ்கி பொயிண்ட் இல் Geo பைகளை பாவித்து 40.0மீ Groyne ஐ நிருமாணிப்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். அண்ணளவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது 19.0 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| **தள அமைவிடம்** | : **ஆரம்ப இடம்** | :- 6 - | **54'18.40" N/81 – 50'40.02" E** |
| | : **இறுதி இடம்** | :- 6 - | **54'18.54" N/81- 50'41.62" E** |
| **நிருமாண வேலைகள்** | : **40.0m Groyne using Geo Bags at Whiskey Point, Pottuvil** | | |
| **நிருமாணக் காலம்** | : **30 நாட்கள்** | | |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும். பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA முன்னுரிமை ஆகியன 04/2016(ii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிருணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கடல்சார் நிருமாணம், நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு கால்வாய்கள் அல்லது தூர்வாரல் மற்றும் தரை சீராக்கல் துறைகளில் 2023-2024 ஆம் ஆண்டுகளுக்காக சி-7 அல்லது சி-6 தரத்தில் CIDA உடன் (முன்பு ICTAD என அழைக்கப்பட்டது) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை பெறுவதற்காக தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:
   அ. மேலேயுள்ள 3 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு சி-6 அல்லது சி-7 CIDA தரத்தைக் கொண்டிருத்தல்.
   ஆ. கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட வருடாந்த சராசரி நிருமாண வேலையின் பெறுமதியானது ஆகக் குறைந்தது 12 மில்லியன் ரூபாவாகவிருத்தல்.
   இ. கடந்த 36 மாதங்களில் பிரதான ஒப்பந்தக்காரராக நிகாரான தன்மையுடைய திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட செயற்றிட்டப் பெறுமதியானது ஆகக் குறைந்தது 12 மில்லியன் ரூபா அல்லது இதற்கு மேற்பட்ட செயற்றிட்டப் பெறுமதி.
5. மேலதிக தகவலை கீழேயுள்ள முகவரியான கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்கள, கரையோர அபிவிருத்திக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணத்தை பரீட்சிக்கலாம் (தொலைபேசி / தொலைநகல்: 0112472622 / 0112387920)
6. 2024.02.21 ஆம் திகதியிலிருந்து 2024.03.06 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், முகவரியான கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்கள, கரையோர அபிவிருத்திக்கான பிரதான பொறியியலாளருக்கு கம்பனி தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. விலைமனுக்கள் 2024.03.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024.04.15 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் 190,000 இலங்கை ரூபா பெறுமதியானதும் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது ரொக்கப் பணத்தில் திணைக்களத்தில் வரவு வைக்கப்படல் வேண்டும்.
10. விலைமனுப்பிணையானது 2024.04.30 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டுமென்பதுடன் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்கள, கரையோர அபிவிருத்திக்கான பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.

மேலேயுள்ள 5 ஆம் மற்றும் 6 ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**பிரதான பொறியியலாளர் (கரையோர அபிவிருத்தி),**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,**
**நான்காம் மாடி, புதிய செயலகம்,**
**மாளிகாவத்த,**
**கொழும்பு-10.**
**தொலைபேசி: 0112472622**
**தொலைநகல்: 0112387920/0112438005**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்.**

**எனது இல: DIVMW/LAD/CEPLA/6/1/11**
**காணி அமைச்சின் குறிப்பு**
**இல.: 4-3/07/2018/HW/434**

### 1964 இலக்கம் 28இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.06.13ஆம் திகதிய 2336/36 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : வடமேல் |
| மாவட்டம் | : குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : மாவத்தகமை |
| கிராம நிலதாரி பிரிவு | : இல. 664, கட்டுகம்பலகெதர |
| கிராமத்தின் பெயர் | : கட்டுகம்பலகெதர |
| வரைபட இலக்கம் | : இ.கி.வ. 1525 பிற்சேர்க்கை இல. 6, தாள் இல. 6 |
| காணியின் பெயர் | : எகொடமலேவத்தை, முடுகஹமுலவத்தை, அட்டிக்காகஹமுல ஹேன உட்பட்ட காணித் துண்டு 22 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 0.1671 |

**எம்.எஸ். ஜானக்க,**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**மாவத்தகமை.**

2024.01.23

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**எச்.கே.கே. ஏ. ஜயசுந்தர**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு 05**
**2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி.**

| | |
|---|---|
| கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில் | வேலையாள் ஒரு நாளுக்கு ரூபா. 1923.10 |

* இதற்கு மேலதிகமாக, 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவுத"திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

# பெறுகை அறிவித்தல்

## களனி பிரதேச சபை

### களனி பிரதேச சபைக்குச் சொந்தமான ஹுனுப்பிட்டிய ஜயந்திமஹல் சந்தி இரயில் நிலையத்திற்கு இணைந்ததாக உள்ள கட்டிடம், கிரிபத்கொட வடக்கு எல்லையாக கடை இல – 18 மற்றும் கிரிபத்கொட வாரச் சந்தையை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அழைப்பு

களனி பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களுக்காக கேள்வி விண்ணப்பங்கள் 2024.03.04 பி.ப.3.00 வரை களனி பிரதேச சபையின் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன், பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2024.03.05 மு.ப.10.00 வரை ஏற்கப்படும்.

கேள்விகளை சமர்ப்பிக்கும் மாதிரிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படுவது எழுத்து மூல வேண்டுதலுடன் மீளளிக்கப்படாத ரூ.3,000.00 படிவக் கட்டணம் மற்றும் கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பிக்கும் சொத்துக்களுடன் சம்பந்தப்பட்ட மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புக் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்களை சமர்பித்த பின்னர் மட்டுமாகும்.

கேள்வி விண்ணப்பங்கள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன் அப்பிரதிகள் இரண்டையும் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு வேறுவேறாக முத்திரையிட்டு மீண்டும் அவ் உறைகளை ஒரு உறையில் இட்டு பொறியிட்டு "செயலாளர், களனி பிரதேச சபை" என்ற முகவரிக்கு 2024.03.05 மு.ப.10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது குறித்த நேரத்திற்கு முன்பு களனி பிரதேச சபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விதாரர்களினால் கேள்வி உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி விடயத்தையும் குறிப்பிடுதல் வேண்டும். சமர்ப்பிக்கப்படாத வேண்டுதல்களுடன் சம்பந்தப்பட்ட வைப்புத்தொகை மற்றும் குறைந்தபட்ச கேள்விக்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு நிதி சபைக்கு உரியதாக்கப்படும்.

2024.03.05 மு.ப.10.00 வரை கேள்வி ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறத்தல் இவ் அலுவலகத்தில் இடம்பெறும் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேள்வி தாரர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

சித்திகரமான கேள்விதாரர்களுக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவித்து அனுப்பிய பின்னர் கேள்விதாரரால் அங்கீகரிக்கப்பட்ட கேள்வித்தொகையில் மாதாந்த வாடகைத்தொகை போன்று 03 மாத தொகையை இவ் அலுவலகத்தில் வைப்புச் செய்து உடன்படிக்கைக்கு உட்படுதல் வேண்டும். அவ்வாறே அரசிற்கு செலுத்த வேண்டிய வரித்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.

மேலும், கேள்விதாரர்கள் களனி பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படும் இடைக்கால யாப்பு மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்படுதல் வேண்டும் கேள்வியை ஏற்றுக்கொள்ளல் பற்றிய இறுதித்தீர்மானம் களனி பிரதேச சபை கேள்விச்சபைக்கு உரியது

தொலைபேசி இலக்கம் - 0112914110

**அட்டவணை**

| தொ. இல | வர்த்தக நிலையம் | குறைந்த பட்ச கேள்வி | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | குத்தகைக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஹுனுப்பிட்டிய ஜயந்திமஹல் சந்திக் கட்டிடம் (தற்போது சதோச வர்த்தக நிலையம் நடத்திச் செல்லப்படும்) | 2,805,000.00 | 28,050.00 | 3,000.00 | 2024.04.01-2026.12.31 |
| 02 | கிரிபத்கொட வடக்கு எல்லையில் கடை அறை இல -18 | 212,850.00 | 5,000.00 | 3,000.00 | 2024.04.01-2026.12.31 |
| 03 | கிரிபத்கொட வாரச்சந்தை | 2,940,000.00 | 29,400.00 | 3,000.00 | 2024.04.01-2026.12.31 |

**ஈ.எல். சுபசிங்ஹ**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரமுள்ள**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**களனி பிரதேச சபை**
**2024.02.19**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

Daily News Classifieds, the Housewives' companion

# ஆப்கானுக்கு எதிரான டி20 தொடரையும் வெல்லும் எதிர்பார்ப்புடன் இலங்கை அணி இன்று களத்தில்



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதல் டி20 போட்டியில் த்ரில் வெற்றியீட்டிய இலங்கை அணி டி20 தொடரையும் கைப்பற்றும் எதிர்பார்ப்புடன் இன்று இரண்டாவது போட்டியில் களமிறங்கவுள்ளது.

ரங்கிரி தம்புள்ளை மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை (17) நடைபெற்ற முதல் போட்டியில் இலங்கை அணி 161 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்த நிலையில் அதனை காத்துக்கொள்ள கடைசி ஓவர் வரை போராட வேண்டி இருந்தது.

இதன்போது கடைசி இரண்டு ஓவர்களுக்கும் 14 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் 19ஆவது ஓவரை வீச வந்த மதீஷ பத்திரண மூன்று ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தியது இலங்கையின் வெற்றி வாய்ப்பை அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டியில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்திய பத்திரண ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

குறிப்பாக துடுப்பாட்டத்திற்கு சாதகமான ஆடுகளத்தில் இலங்கை அணி அதிக ஓட்டங்களை பெறத் தவறியது. வழக்கத்திற்கு மாறாக ஐந்தாவது வரிசையில் வந்த அணித் தலைவர் வனிந்து ஹசரங்க அதிரடியாக 32 பந்துகளில் 7 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் பெற்ற 67 ஓட்டங்களுமே எதிரணிக்கு சவாலான இலக்கு ஒன்றை நிர்ணயிக்க உதவியது.

இந்நிலையில் இன்றைய போட்டியில் இலங்கை அணி தனது துடுப்பாட்ட வரிசையில் அதிக அவதானம் செலுத்துவது முக்கியமாகும். குறிப்பாக ஒருநாள் தொடரில் அபாரமாக துடுப்பெடுத்தாடிய பத்தும் நிசங்க மற்றும் அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியுஸ் மற்றும் முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்க ஆகிய மூவரும் தலா 6 ஓட்டங்களையே முதல் போட்டியில் பெற்றிருந்தனர்.

வழக்கம்போல் ஆப்கான் அணி துடுப்பாட்டத்தில் ஆரம்பத்தில் சிறப்பாக ஆடி கடைசி ஓவர்களில் மளமளவென்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது முதல் போட்டியில் தோல்வியை சந்திக்க காரணமானது. எனினும் அந்த அணி தனது தவறை சரி செய்யும் பட்சத்தில் இலங்கை அணிக்கு கடும் சவாலாக அமையும்.

இன்று இரவு 7 மணிக்கு போட்டி ஆரம்பமாகவுள்ளது.

## கடைசி இரண்டு டி20க்கான டிக்கெட்டுகள் விற்று தீர்ந்தன



ரங்கிரி தம்புள்ளை மைதானத்தில் நாளை (19) மற்றும் எதிர்வரும் பெப்ரவரி 21 ஆம் திகதி நடைபெறும் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டு மற்றும் மூன்றாவது டி20 போட்டிகளுக்கான அனைத்து விக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்துள்ளன.

கொழும்பு மற்றும் தம்புள்ளையில் அமைந்துள்ள டிக்கெட் கௌண்டர்கள் மூடப்பட்டிருப்பதாகவும் இந்த டிக்கெட் கௌண்டர்களுக்கு செல்ல வேண்டாம் என்றும் இலங்கை கிரிக்கெட் சபை பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை மற்றும் ஆப்கான் அணிகளுக்கு இடையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற முதலாவது டி20 போட்டியை பார்வையிட அரங்கில் 18,000 ரசிகர்கள் கூடி இருந்தனர். இந்த பரபரப்பான போட்டியில் இலங்கை அணி 4 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனின் முக்கிய நகரம் ரஷ்யா வசம்



உக்ரைனின் கிழக்கில் உள்ள அவ்தீவ்கா நகரத்தை ரஷ்யத் துருப்புகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன.

உக்ரைனின் அந்தப் பின்னடைவு ரஷ்யாவுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது. ரஷ்யாவுக்குக் கிடைத்திருக்கும் அந்த வெற்றி மேலும் பல நகரங்களைக் கைப்பற்றுவதற்கு வழியமைக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நகரிலிருந்து உக்ரைன் ஏற்கனவே அதன் துருப்புகளை மீட்டுக்கொண்டுள்ளது. துருப்புகள் அருகே உள்ள ரசாயன ஆலையை அடைந்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டது.

ஜெர்மனியில் நடைபெறும் மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் பேசிய உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி ரஷ்யாவை எதிர்த்துப் போராடக் கூடுதல் நிதியுதவியும் இராணுவ உதவியும் தேவை என்று மீண்டும் வலியுறுத்தினார்.

உக்ரைனுக்கு வழங்க வேண்டிய அடுத்த கட்ட உதவிக்கு அமெரிக்க பாராளுமன்றம் இன்னமும் ஒப்புதல் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காசா போர் நிறுத்தம்: பாதுகாப்பு சபை வாக்கெடுப்பில் வீட்டோவுக்கு அமெரிக்கா உறுதி




காசாவில் அவசர போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் அல்ஜீரியா கொண்டுவந்துள்ள தீர்மானம் பாதுகாப்புச் சபையில் நாளை (20) வாக்கெடுப்புக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இதற்கு எதிராக வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்த அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப வரைவு ஒன்றை அல்ஜீரியா இரு வாரங்களுக்கு முன் கொண்டுவந்தபோதும், இது போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் பேச்சுவார்த்தையில் குழப்பத்தை உருவாக்கும் என்று அமெரிக்கா கூறியிருந்தது..

இந்நிலையில் இதன் மீது வாக்கெடுப்பை நடத்தும்படி அல்ஜீரியா பாதுகாப்புச் சபையை சனிக்கிழமை (17) கேட்டுள்ளது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு 15 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளின் வீட்டோ இன்றி குறைந்தது ஒன்பது வாக்குகளை பெற வேண்டும்.

"இந்தத் தீர்மான வரைவுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கப் போவதில்லை. அது கொண்டுவரப்பட்டால் நிறைவேற்றப்படமாட்டாது" என்று ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் லிண்டா தோமஸ் கரீன்பீல்ட் கடந்த சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நாவில் இஸ்ரேலை தொடர்ந்து பாதுகாத்து வரும் அமெரிக்கா கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இதுவரை இரு முறை வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாக். தேர்தல் மோசடி: மூத்த அதிகாரி ஒப்புதல்



பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தலில் மோசடி நடந்ததாகக் கூறிய மூத்த அதிகாரி ஒருவர் பதவி விலகியுள்ளார்.

இராணுவத் தலைமையகம் இருக்கும் ராவல்பிண்டி நகரில் ஆணையாளராகப் பணியாற்றிய லியாக்கட் அலி சத்தா இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்;. வாக்களிப்பின்போது நடந்த மோசடியைத் தாம் தனிப்பட்ட முறையில் மேற்பார்வையிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸாரிடம் சரணடையப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தக் குற்றச்சாட்டுகளைத் தேர்தல் ஆணைக்குழு மறுத்துள்ளது. எனினும் விசாரணை நடத்தப்படும் என்று அது தெரிவித்தது.

பாகிஸ்தானில் தேர்தல் நடந்து 10 நாட்கள் கடந்துள்ள நிலையில் அங்கு போராட்டங்கள் தீவிரமடைகின்றன. தலைநகர் இஸ்லாமாபாத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் சிறை அனுபவிக்கும் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ஆதரவு சுயேச்சை வேட்பாளர்கள் அதிக இடங்களை வென்றபோதும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை எந்தத் தரப்பும் பெறவில்லை.

இந்தத் தேர்தலில் மோசடி இடம்பெற்றதாக இம்ரான் கான் ஆதரவாளர்கள் குறிப்பிட்டு வருகின்றனர். எனினும் இந்தத் தேர்தலில் இரண்டாம் இடத்தை பெற்ற நவாஸ் ஷரீப் கட்சி ஆறு கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணி அரசு ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளது.

# காசா போர் நிறுத்த பேச்சில் தொடர்ந்து முட்டுக்கட்டை: நெதன்யாகுவின் பிடிவாதத்தினால் ஹமாஸ் எச்சரிக்கை

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதோடு உடன்பாடு ஒன்றை ஏட்டுவதற்கான பேச்சுவார்த்தைகள் அண்மைய நாட்களில் நம்பிக்கை தருவதாக இல்லை என்று மத்தியஸ்தம் வகிக்கும் கட்டார் தெரிவித்துள்ளது.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமான மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் தெற்கு நகரான ரபா மீதான தாக்குதலை நிறுத்துவதற்கு சர்வதேச அளவில் விடுக்கப்பட்டு வரும் அழைப்புகளை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சனிக்கிழமை (17) நிராகரித்த நிலையிலேயே போர் நிறுத்தத்திற்கான எதிர்பார்ப்புகள் குறைந்துள்ளன.

காசாவில் இருக்கும் அனைத்து ஹமாஸ் படைப் பிரிவுகளையும் வேரறுப்பதாக கூறிவரும் இஸ்ரேல், அங்கு கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக தாக்குதலை நடத்தி வருகிறது. மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் நடத்திய புதிய தாக்குதல்களில் குறைந்தது 40 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

டெயிர் அல் பலாஹ் நகரில் இருக்கும் அல் சவைதா மற்றும் நுஸைரத் அகதி முகாமில் உள்ள வீடுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களிலேயே பெரும் எண்ணிக்கையான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இதேநேரம் தெற்கு நகரான கான் யூனிஸில் உள்ள வீடுகளை இலக்கு வைத்து நேற்று இடம்பெற்ற வான் தாக்குதல்களில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டதாக வபா கூறியது.

இதே காலப்பகுதியில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் ஒன்பது வீடுகளை இலக்கு வைத்து இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டு வீசியுள்ளன. இதனால் 13 பேர் கொல்லப்பட்டு பல டஜன் பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலிய கடற்படை கப்பல்களும் ரபா கடற்கரை மீது குண்டுகளை வீசி இருப்பதோடு நகரின் தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகளை இலக்கு வைத்து பீரங்கி தாக்குதல்களும் இடம்பெற்றதாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 29 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. தவிர காயடைந்தவர்கள் எண்ணிக்கை 69 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

ரபா மீது இஸ்ரேல் படையெடுக்கும் அச்சம் அதிகரித்திருக்கும் சூழலில் அங்குள்ள பலஸ்தீனர்கள் எல்லை கடந்து தமது நாட்டுக்குள் ஊடுருவும் கவலை எகிப்திடம் அதிகரித்துள்ளது.

சினாய் பாலைவனத்தை நோக்கி கட்டாய வெளியேற்றத்தை எகிப்து எதிர்ப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசி மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளார். கடந்த சனிக்கிழமை பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மெக்ரோனுடன் தொலைபேசியில் பேசியபோதே சிசி இதனைத் தெரிவித்ததாக ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் இரத்தம் சிந்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் சுதந்திர பலஸ்தீன நாடு ஒன்றை நிறுவுவதை முன்னெடுப்பது பற்றியும் இரு தலைவர்களுக்கும் இடையே இணக்கம் எட்டப்பட்டதாக அந்த அலுவலகம் மேலும் கூறியது.

எனினும் கெய்ரோ பேச்சுவார்த்தையில் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட்டாலும், ரபா மீதான இஸ்ரேலிய துருப்புகளின் தரைவழி தாக்குதல் முன்னெடுக்கப்படும் என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். 'நாம் அதனை (போர் நிறுத்தம்) எட்டியபோதும் ரபாவுக்குள் நாம் நுழைவோம்' என்று சனிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார். எனினும் காசாவில் உள்ள பயணக்கைதிகளை அரசு கைவிட்டதாக இஸ்ரேலில் எதிர்ப்பு வலுத்து வருவதோடு கடந்த சனிக்கிழமையும் ஆயுரக்கணக்கானவர்கள் டெல் அவிவில் இஸ்ரேலிய அரசுக்கு எதிராக அர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையிலேயே நெதன்யாகு இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

'எமது அன்புக்குரியவர்கள் தொடர்பில் முடிவெடுப்பதில் அரசியலை ஒதுக்கி வையுங்கள்' என்று



ஒபெர் கல்டரோன் என்ற பணயக்கைதியின் சகோதரர் குறிப்பிட்டார். 'கெய்ரோ முயற்சி தோல்யுற்றால் அது போன்று வேறு வாய்ப்புகள் வராது என்பதுவே உண்மை' என்றும் அவர் கூறினார்.

மியுனிக் பாதுகாப்பு உச்சிமாநாட்டில் பேசிய கட்டார் பிரதமர் முஹமது பின் அப்துல் ரஹ்மான் அல்தானி, பேச்சுவார்த்தைகள் அதிகம் நம்பிக்கை தருவதாக இல்லை என்றார்.

மேலும் பணயக்கைதிகளை விடுவிப்பதுடன் தொடர்புபட்ட புதிய போர் நிறுத்தம் ததொடர்பில் பல நாடுகள் வலியுறுத்தியபோதும் அந்த முயற்சி சிக்கலாக உள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கெய்ரோவில் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் மூத்த அதிகாரிகள் பங்கேற்று போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் தீவிர முயற்றியில் ஈடுபட்டுள்ளனர்.

'கடந்த சில நாட்களாக நீடிக்கும் போக்கு உண்மையில் நம்பிக்கை தருவதாக இல்லாதபோதும், நான் எப்போழுதும் மீண்டும் மீண்டும் கூறுவது போன்று, நாம் எப்போதும் நம்பிக்கையுடனும் எப்போதும் அழுத்தத்துடனும் இருக்கிறோம்' என்று அல்தானி கூறினார்.

மறுபுறம் பேச்சுவார்த்தைகளில் நெதன்யாகு தொடர்ந்து தந்திர ஆட்டத்தை விளையாடி வருவதாக ஹமாஸ் அமைப்பின் மூத்த பேச்சாளர் ஒசாமா ஹம்தான் அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார்.

கருத்து வேறுபாட்டுக்கான பிரதான காரணம் நெதன்யாகுவும் அவரது தந்திர ஆட்டங்களும் தான் என்று கூறிய ஹம்தான் 'அவர் எந்த ஒரு ஏற்பாடு அல்லது உடன்பாட்டையும் எட்டாமல் இருக்க முயற்சித்து வருகிறார். அது தெளிவானது' என்றார்.

இந்நிலையில் உதவி விநியோகங்கள் வடக்கு காசாவை அடையும் வரை பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தப் போவதாக ஹமாஸ் எச்சரித்துள்ளது. வடக்கு காசா பஞ்சம் ஒன்றை நெருங்கி வருவதாக உதவி நிறுவனங்கள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'பட்டினியை பலஸ்தீன மக்களை பழி தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் நிலையில் பேச்சுவார்த்தைகளை தொடர முடியாது' என்று ஹமாஸ் அமைப்பின் மூத்த உறுப்பினர் ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

முன்னதாக போர் நிறுத்தம் ஒன்றுக்கான நிபந்தனைகளை ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே முன்வைத்தபோதும் அதனை 'கேலிக்குரியது' என்று நெதன்யாகு நிராகரித்தார். இதில் போரை முழுமையாக நிறுத்துவதுவது, இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பலஸ்தீன கைதிகளை விடுவிப்பது மற்றும் காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெறுவது போன்ற நிபந்தனைகளும் அடங்கும்.

அதேபோன்று பலஸ்தீன நாடு ஒன்றை அங்கீகரிப்பது பற்றிய சில மேற்குலக நாடுகளின் அழுத்தத்தையும் நெதன்யாகு நிராகரித்துள்ளார்.

இஸ்ரேலிய துருப்புகள் காசாவில் உள்ள மருத்துவமனைகளை இலக்கு வைத்து தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் சூழலில் தெற்கு காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான நாசர் மருத்துவமனை தொடர்ந்து இயங்கவில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த மருத்துவமனை ஒரு மாதத்திற்கு மேலாக இஸ்ரேலின் முற்றுகையில் இருக்கும் நிலையில் இங்கு அண்மைய தினங்களில் இஸ்ரேலிய துருப்புகள் சுற்றிவளைப்புகளை நடத்தி வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 19ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.